# அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 நவம்பர்

மலர்:46 இதழ்:11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.சீனிவாசன்

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன், சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன், செ.பிரகாஷ், ச.தினேஷ், இ.மைக்கேல் லில்லிபுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி

9677003178



முகவரி:

பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


## உள்ளடக்கம்...


1. மறுக்கப்பட்ட உரிமைகளை... போராட்டங்களால் மீட்டெடுப்போம்! தலையங்கம்.......4
2. எட்டாவது ஊதியக்குழுவும், இதுவரை எட்டப்படாத குறைந்தபட்ச ஊதியமும் பொதுச் செயலாளர் மேசையிலிருந்து.......5
3. 3% அகவிலைப்படி அறிவிக்க வலியுறுத்தி வட்டத் தலைநகர் ஆர்ப்பாட்டம்.......10
4. 10 அம்ச கோரிக்கை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ கோரிக்கை அட்டை அணிந்து ஆர்ப்பாட்டம்.......16
5. கண்களை விற்று ஓவியம் வாங்கும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை தனியார்மயமாக்கும் முயற்சி.......19
6. மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்ட முடிவுகள்.......22
7. வாழ்த்துக்கள்.......24
8. நவீன உழைப்புச் சுரண்டலின் புதிய வடிவங்கள்.......25
9. நில அளவை மூலம் வருவாய்த் துறையில் நுழையும் தனியார் மயம்.......27
10. ஜிஎஸ்டி மூலமாக மையப்படுத்தப்படும் அரசியல் அதிகாரமும், மூலதனமும்.......28
11. எண்பதுகளின் தமிழகப் பண்பாட்டு வாழ்வின் படிமங்கள்.......31
12. உயர்கல்வியின் கதவுகளை அடைக்கும் தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தம்: சமூக நீதியைக் காவு கொடுக்கும் அபாயம்!.......33

தலையங்கம்

# மறுக்கப்பட்ட உரிமைகளை... போராட்டங்களால் மீட்டெடுப்போம்!

தி.மு.க. அரசின் ஆட்சிக்காலம் எஞ்சிய 5 மாதங்களே உள்ள நிலையில் நாம் எதிர்ப்பார்த்ததை போலவே கடந்த கால வரலாறுகள் உணர்த்துகின்றவாரே போராடினால் மட்டுமே நமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்பதை தற்போதைய ஆட்சியாளர்களும் என்பதை உணர்த்தியிருக்கின்றார்கள்.

ஊழியர் மத்தியில் தொய்வையும், சோர்வையும், சலிப்பையும் ஏற்படுத்துவதன் மூலம் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யலாம் என்ற அரசாங்கத்தின் போக்கை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உடைத்தெறிய வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அதிகாரம், பொய்யான வாக்குறுதிகள், அரசாணைகள், அவசரச் சட்டங்கள் போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க நினைக்கும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து உரிமைகளை மீட்டுப்பெறுவதில் சுணக்கமோ, நம்பிக்கையின்மையோ ஏற்பட்டுவிடாமல் போரட்டத்தை வெற்றிகரமாக மாற்றிட ஒரு முழுமையான கருத்தொற்றுமை இந்நேரத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

போராட்டங்களை காலத்திற்கேற்ப மாற்றி அமைத்து எவ்வளவு நாள் போராடினாலும் எதுவும் செய்யமுடியாது என்ற முரண்டு பிடிக்கும் அரசாங்கத்தை நம்முடன் வந்து பேச்சு வார்த்தை நடத்தியே ஆக வேண்டிய கட்டயாத்தை ஏற்படுத்துகின்ற நிர்ப்பந்தத்தை நாம் உருவாக்கிட வேண்டும்.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது. அரசு ஊழியர் அனைவரும் அவர்களுடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறார்கள். அந்த சக்தி, பெரு நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணர்வார்கள். எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்தில் அரசுக்கு உறுதுணையாக நிர்பவர்கள் அரசு ஊழியர் என்ற வரலாற்றை அவர்களும் புரிந்து கொள்வார்கள். அதை புரிய வைக்க முயன்றும் முடியாமல் போய்விட்டதால் புரிய வைக்க வேண்டிய போராட்டங்களை பேரவைகள் தீர்மானிக்க வேண்டும்.

பேரவையில் திட்டமிடக்கூடிய போராட்டங்கள் நாம் விரும்பி ஏற்ற போராட்டங்கள் அல்ல, இவை நம்மீது திணிக்கப்பட்டுள்ள போராட்டங்கள். இந்தப்போராட்டங்களை திணித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கிழிந்து தொங்குகிற அளவுக்கு நமது போராட்ட யுத்திகளும் செயல் திட்டங்களும் அமைய வேண்டும்.

“வரலாற்றில் ஒன்றுமே நடக்காத நூற்றாண்டுகளும் இருக்கின்றன...

ஒரு நூற்றாண்டையே புரட்டிப்போட்ட சில வாரங்களும் இருக்கின்றன..”

நாம் திட்டமிடும் போராட்டம் நவம்பர் புரட்சியை மாவீரன் தோழர் லெனின் கூற்றை நிணவுபடுத்துகின்ற வகையில் அமையுமெனில்... மறுக்கப்பட்ட உரிமைகளை போராட்டங்களால் மீட்டெடுக்க முடியும்.

- ஆசிரியர். ●

# எட்டாவது ஊதியக்குழுவும், இதுவரை எட்டப்படாத குறைந்தபட்ச ஊதியமும்

கடந்த பிப்ரவரி-2025ல் டெல்லி சட்டமன்றத் தேர்தலின் போது மத்திய அரசு 8வது ஊதியக்குழு அமைக்கப்படும் எனவும், அந்த கமிட்டியின் முடிவாக 01.01.2026ல் புதிய ஊதிய மாற்றம் அமுலுக்கு வரும் என அறிவித்தது. அறிவிப்புகள் வெற்று அறிவிப்புகளாக இருந்த நிலையில் பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தியும் செவிசாய்க்காத மத்திய அரசு, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பாக தொடர்ந்து மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசு செவிசாய்க்காத நிலையில், கடந்த 27.04.2025 மற்றும் 28.04.2025ஆகிய இரண்டு நாட்கள் உதய்பூரில் நடைபெற்ற தேசிய செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி 09.07.2025 அன்று அகில இந்திய அளவில் காஷ்மீர் முதல் கன்னியகுமரி வரை அனைத்து மாநிலங்களிலும் 25 கோடிபேர் பங்கேற்ற வேலை நிறுத்தம் மிக வெற்றிகரமாக நடைபெற்றது. 25.09.2025 அன்று தேசம் முழுவதும் அனைத்து அலுவலகங்களிலும் 8வது ஊதியக்குழுவை அமுல்படுத்திட வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை வலியுறுத்தி மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் எதிரொலியாக மத்திய அரசு ஏற்கனவே அறிவித்த 8வது ஊதியக்குழுவை அமைத்துள்ளது.

இதன் மூலமாக வருகிற 01.01.2026 முதல் ஊதியமாற்றம் இருக்காது, காலதாமதமாக அறிவிக்கப்பட்டு, அதன்பிறகு முன்தேதியிட்டு 01.01.2026 முதல் அமுலுக்கு வரும் என அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த ஊதிய மாற்றத்திலேயே 21 மாதகால நிலுவைத்தொகை இதுவரை பெறப்படாமல், கோரிக்கை நிலுவையில் உள்ளது. தற்போது இந்த ஊதிய மாற்றமும் காலதாமதமாக அறிவிக்கப்பட்டு நிலுவைத்தொகை மீண்டும் கேள்விக்குறியாகும் வாய்ப்புள்ளது. ஒவ்வொரு ஊதிய மாற்றத்திலும் இந்த பிரச்சனை தொடர்கதையாக தொடர்கிறது. மத்திய மாநில அரசுகள் ஊதிய மாற்றத்தை ஏதோ அரசு ஊழியர்களுக்கு இனாமாக கொடுப்பது போல வேண்டா வெறுப்பாக காலதாமதமாக அறிவிப்பு, காலதாமதமான அமுலாக்கம், நிலுவைத்தொகை மறுப்பு, ஆட்குறைப்பு, துறைகள் மறு சீரமைப்பு என சந்திக்கும் போதெல்லாம் பல்வேறு தடைகளைத்தாண்டி, கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி, அடக்குமுறைகள், தடியடிகள், கைது, சிறை வாழ்க்கை, பேச்சுவார்த்தை, நீதிமன்ற வழக்கு, என பல்வேறு போராட்டங்களை நடத்தி இறுதியில் ஊதிய மாற்றம் கிடைத்தால் போதுமென்று நாமும் பெற்றுக்கொண்டு வருகிறோம். ஆனால் இந்த ஊதிய மாற்றத்திற்குப் பின்னால் ஒரு வரலாறு உண்டு. அதை நாம் அறிவோமா?

**முதலாவது ஊதிய மாற்றம்:**

முதலாவது மத்திய ஊதியக்குழு 10.05.1946ல் நீதிபதி சீனிவாச வரதாச்சாரியார் தலைமையில் அமைக்கப்பட்டது. அன்றே பாரதப் பிரதமரைச்சந்தித்து மாநில அரசு ஊழியர்களையும் இதன் வரம்பிற்குள் சேர்த்திட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 29.07.1946ல் அன்றைய முதலமைச்சரை

சந்தித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 01.01.1947 அன்று முதலாவது ஊதியக்குழு பரிந்துரைகள் அரசாணைகளாக வெளியிடப்பட்டன. இதில் மத்திய, மாநில அரசு ஊழியர்களிடையே ஊதிய வேறுபாடு அதிகரித்தது. இதை எதிர்த்து 15.12.1947 முதல் 21.12.1947வரை நடைபெற்ற வேலைநிறுத்தம் கடும் அடக்குமுறைக்கு உள்ளானது. சங்கக் கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டது, தலைவர்கள் எஸ்மா சட்டத்தில் கைது, தடியடி, கண்ணீர் புகை குண்டுகள் வீச்சு, 144 தடை உத்தரவு இதனால் 22.12.1947 அன்று வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது. 1959ல் தமிழ்நாட்டில் முதலாவது ஊதியக்குழு அமைக்கப்பட்டு, 1960ல் அமல்படுத்தப்பட்டது. இதில் மாநில அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் மிகுந்த ஊதிய இடைவெளி ஏற்பட்டது.

**முத்தரப்பு மாநாடு:**

Indian Labour Conference சார்பாக அமைக்கப்பட்ட முத்தரப்பு குழு (தொழிலாளர்கள், முதலாளிகள், அரசு) சார்பான மூன்று பிரதிநிதிகளும் கலந்துகொண்டு விவாதித்து இந்திய தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதற்கான வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு தொழிற்சங்கங்களின் சார்பாக தொழிலாளர்களுக்கான வாழ்க்கை ஊதியம் வழங்கிட வேண்டும் என வைக்கப்பட்ட கோரிக்கை, இந்தியா சுதந்திரமடைந்த பிறகு அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரிட்டன் அரசின் ஊட்டச்சத்து நிபுணர் மற்றும் உடலியல் நிபுணர் சர்.W.R.அக்ராய்டு என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டி ஆய்வு செய்து ஒரு தொழிலாளி வேலை செய்தால் அவரது குடும்பமாக, அவரது வாழ்க்கைத்துணை, அவரது குழந்தைகள் இரண்டு என கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. தொழிலாளி 1 Unit வாழ்க்கைத் துணை 0.8 Unit குழந்தைகள் 0.6x2 என 1.2 Unit ஆக மொத்தம்: 3 Unit. ஆகவே, ஒரு தொழிலாளிக்கான ஊதியம் என்பது இந்த 3 யூனிட்டுக்கான ஊதியமாக இருக்க வேண்டும். ஒரு மனிதன் நாள்முழுவதும் உழைத்திட 3200 கலோரி செலவாகும் என கணக்கிடப்பட்டது. ஆனால், 2600 கலோரி மட்டும் கணக்கில் கொள்ளப்பட்டு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. அதை ஈடுகட்டும் வகையில் உணவு, உடை, வாழ்விடம், ஆகியவற்றை கணக்கில் கொண்டு அவருக்கான (3 Unit) Living Wage ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. மத்திய அரசால் இந்த ஊதியம் வழங்கிட இயலாது என மறுக்கப்பட்டது. எனவே, அதற்கு இணையான ஊதியம் வழங்கிட பட்டாச்சார்யா என்பவர் தலைமையில் மீண்டும் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

இந்திய அரசின் தொழிலாளர் துறையின் சார்பாக நியமிக்கப்பட்ட K.G.பட்டாச்சார்யா கமிட்டி மேற்கண்ட செலவினங்களைக் கணக்கில் கொண்டு அரசின் பரிந்துரைப்படி அதிகப்படியான செலவினங்களைக் குறைத்து Living Wageக்கு இணையான ஊதியம் வழங்கிட பரிந்துரைத்தது. ஆனால் மத்திய அரசு இந்த ஊதியமும் வழங்கிட மறுத்தது.

ஒரு தொழிலாளி வாழ்வதற்கான வாழ்க்கைத் தேவைக்கான குறைந்தபட்;ட ஊதியம் வழங்கிட வேண்டும் என்ற அடிப்படையில் Need Based Minimum Wage ந என்ற மிகக்குறைந்த ஊதிய

விகிதம் பரிந்துரைக்கப்பட்டது. இதை இந்த முத்தரப்பு மாநாடு ஏற்றுக்கொண்டு தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு வழங்கிட வேண்டுமென பரிந்துரைத்தது.

**இரண்டாவது மத்திய ஊதியக்குழு:**

கடந்த 21.08.1957 அன்று ஜஸ்டிஸ். ஜகனாததாஸ் என்பவர் தலைமையில் வி.வி.காந்தி, என்,கே சித்தாந்தா எம்.எல்,ஏ, தந்துவாலா, மரகதம் சந்திரசேகர் ஆகியோர் உறுப்பினராகக்கொண்ட இரண்டாவது ஊதியக்குழுவின் இடைக்கால அறிக்கை 1957 டிசம்பரில் அமுலாக்கப்பட்டது. லோயர் டிவிசன் கிளார்க் ஊதியம் 90-4-110-3-140 என நிர்ணயிக்கப்பட்டது. எல்லா ஊதியக்குழுவிலும் நமக்கான ஊதிய மாற்றத்தை மட்டுமே நாம் பிரதானமாக காண்கிறோம். ஆனால், அரசுகளோ சத்தமே இல்லாமல் பல உரிமைகள் பறிக்கப்பட்டுவிடுகிறன்றன. இரண்டாவது ஊதிய மாற்றத்தில் 15 நாட்களாக இருந்த தற்செயல் விடுப்பு, 12 நாட்களாக குறைக்கப்பட்டது. தினமும் ½ மணி வேலை நேரம் அதிகரிக்கப்பட்டது. சமவேலைக்கு சமஊதியம் காற்றில் பறக்கவிடப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களை மாநில அரசு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ.20‰- குறைவு.

**3ஆவது மத்திய ஊதியக்குழு பரிந்துரைகள்:**

மத்திய அரசு ஊழியர்களுக்கான 3ஆவது ஊதியக்குழு 1970ல் அமைக்கப்பட்டது. இக்குழு அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் படிகள் தொடர்பாக ஆய்வு செய்து 1973ல் அரசிடம் பரிந்துரைகளை வழங்கியது. இந்த ஊதியக்குழுவில் 20% -30% ஊதிய மாற்றமும், ஓய்வூதிய விதிகள் திருத்தப்பட்டது. விடுமுறை, போனஸ் மற்றும் மருத்துவப்படி போன்ற பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

தமிழ்நாடு அரசு விலைவாசிப்புள்ளி அடிப்படையில் வாலாயமாக வழங்க வேண்டிய அகவிலைப்படியை முதல்வரின் பிறந்தநாள் பரிசு, பொங்கல் பரிசு, தீபாவளி பரிசு என அற்பத்தொகையை கொடுத்தது. 1974ல் 8 தவணை அகவிலைப்படிகள் மறுக்கப்பட்டன. இதனால் தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களின் சம்பள விகிதம் இந்தியாவிலேயே மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

**4வது ஊதியக்குழு பரிந்துரைகள்:**

மத்திய அரசு ஊழியர்களுக்கான 4வது ஊதியக்குழு நீதிபதி சிங்கால் தலைமையில் 1983ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு 1986ஆம் ஆண்டு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. இந்த ஊதிய மாற்றத்தில் குரூப் ஏ, குரூப் பி, குரூப் சி என அனைத்து ஊழியர்களும் பாதிக்கப்பட்டனர். கடந்த ஊதிய விகிதத்தில் குறைந்தபட்சம் ரூ.196, அதிகபட்சம் ரூ.750 ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. மத்திய நிர்வாக தீர்ப்பாயம் அமைக்க பரிந்துரைக்கப்பட்டது.

**5வது ஊதியக்குழு பரிந்துரைகள்:**

மத்திய அரசு ஊழியர்களுக்கான 5வது ஊதியக்குழு நீதிபதி திரு. ஞ.ரத்தினவேல்பாண்டியன் அவர்கள் தலைமையில் 09.04.1994ல் அமைக்கப்பட்டது. இந்திய நாட்டில் நிர்வாக அமைப்பை வெட்டிச்சுறுக்க இக்குழு முடிவெடுத்தது. அதன் பரிந்துரைகள் 01.01.1996 முதல் அமுலுக்கு வந்தது. இக்குழுவால் 54 ஊதிய விகிதங்கள் 34 ஊதிய விகிதங்களாக குறைக்கப்பட்டன. ஊதிய விகிதங்கள் 20% உயர்த்திட பரிந்துரைத்தது. இது மிகக்குறைந்த ஊதிய

உயர்வு என மத்திய தொழிலாளர்கள் ஒன்று கூடி போராடினார்கள். குறிப்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர்சம்மேளனம் 40% ஊதிய உயர்வு கொடுத்தே ஆகவேண்டுமென வலியுறுத்தியது. அன்றைக்கு பாரதப்பிரதமாராக உயர்திரு.ஐ.கே.குஜ்ரால் தலைமையில் ஆட்சி நடைபெற்று வந்தது. மத்திய அரசு 56 இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவால் ஆட்சி அமைக்கப்பட்டிருந்தது. எனவே, மத்திய அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று 40% ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் மத்திய அரசுக்கு வலியுறுத்தப்பட்டதன் விளைவாக 40% ஊதிய உயர்வை மத்திய அரசு வழங்க நேர்ந்தது. ஆனால், 30 சதவீத ஆட்குறைப்பு நடவடிக்கைக்கு பரிந்துரைத்தது. மேலும், பணி நியமனங்களை குறைக்கவும், கணினி பயன்பாட்டை அதிகரிக்கவும் இக்குழு பரிந்துரைத்தது. அரசுப்பணிகளை தனியாருக்கு தாரை வார்த்தல் உள்ளிட்ட பல்வேறு ஆபத்தான முடிவுகளை எடுத்தது. கூடுதலாக விருப்பார்ந்த பணி ஓய்வுத் திட்டத்தை அமுல்படுத்தியது. Performance based Incentivies மற்றும் அரசு ஊழியர்களின் ஊதியத்தில் கிரேடு நிர்ணயிக்கப்பட்டது. குறைந்தபட்ச ஊதியமாக ரூ.2550/- நிர்ணயிக்கப்பட்டது. ஓய்வூதியத்திற்கான புதிய விதிமுறைகள் கொண்டுவரப்பட்டன. வேலை மதிப்பீடுகள், பதவி உயர்வு கொள்கைகளில் புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த ஊதிய மாற்றத்தில் பயணப்படி உள்ளிட்ட பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

**6வது ஊதியக்குழு பரிந்துரைகள்:**

6வது ஊதியக்குழு நீதிபதி B.N.ஸ்ரீகிருஷ்ணா அவர்கள் தலைமையில் 05.10.2006 இல் அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 24.03.2008 இல் சமர்ப்பித்தது. 01.01.2006 முதல் முன்தேதியிட்டு 29.08.2006 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்குழுவின் மூலம் Pay Band and Grade Pay Structure நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏற்கனவே பெற்றுவந்த ஊதியத்தோடு 1.86 Fitment Factor ல் வழங்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரையால் ஜூனியர் மற்றும் சீனியர் பதவிகளுக்கான ஊதிய இடைவெளிகள் சுருக்கப்பட்டது. Performance Based Incentives பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் கடும் எதிர்ப்பின் காரணமாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில் தாமதம் காட்டப்பட்டது.

**7வது ஊதியக்குழு பரிந்துரைகள்:**

7வது ஊதியக்குழு நீதிபதி அசோக்குமார் மாத்தூர் தலைமையில் 28.02.2014ல் அமுல்படுத்தப்பட்டது. 19.05.2026 சமர்ப்பிக்கப்பட்டு, 01.01.2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் கடந்த ஊதியக்குழுவில் அமுல்படுத்தப்பட்ட Pay Band and Grade Pay Structure பின்பற்றப்பட்டது. 40 ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. கடந்த ஊதியத்தோடு 2.57 சதவீத கணக்கிடு செய்யப்பட்டு, Level, Cell முறையில் Fitment Factor மூலம் அட்டவணைப்படுத்தப்பட்டு நேரடியாக ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு Pay Fixation முறை பின்பற்றப்பட்டது.

இந்த ஊதிய மாற்றத்தில் மிகக்குறைவாக 14 முதல் 16 சதவீதம் மட்டுமே ஊதிய உயர்வு பலன் கிடைக்கப்பட்டது. இந்த ஊதிய மாற்றத்திற்கான நிலுவைத்தொகை வழங்கப்படவில்லை. இந்த ஊதிய

மாற்றத்திலும் *Performance Releted Pay* பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், இந்த முறையும் ஊழியர்களின் கடும் எதிர்ப்பின் காரணமாக அமுல்படுத்தப்படவில்லை. ஆனாலும், ஆபத்து தொடர்கிறது. *Digital Payroll* முறை ஊக்குவிக்கப்பட்டது. இதனால், அலுவலகங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஊதிய மாற்றத்தை தமிழ்நாட்டில் அமுல்படுத்திட கடந்த 2017ல் தொடர் போராட்டங்களை நடத்தி, நீதிமன்றம் வரை சென்று நமது ஊதிய மாற்றத்தை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும், இன்றுவரை அந்த அமுலாக்கத்தில் 21 மாதகால நிலுவைத்தொகை இன்றுவரை தமிழ்நாடு அரசு வழங்காமல் நம்மை ஏமாற்றிவருகிறது.

**8வது ஊதியக்குழு அமைப்பு:**

மேற்கண்ட பல்வேறு ஊதியக்குழு அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகே பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், 8வது ஊதியக்குழு கடந்த 16.01.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் உள்ளிட்ட பல்வேறு மத்திய தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் கடந்த அக்டோபர் மாதம் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவர் இந்திய உச்ச நீதிமன்ற முன்னால் நீதிபதி மற்றும் தற்போது இந்திய பத்திரிக்கை கவுன்சிலின் தலைவராக பணியாற்றி வருகிறார். கூடுதலாக பெங்க@ர் இந்திய மேலாண்மை நிறுவனத்தின் பேராசிரியர் திரு.புலக்கோஷ் மற்றும் இயற்கை எரிவாயு செயலாளர் திரு. பங்கஜ் ஜெயின் ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். குழு அமைப்பதற்கே இவ்வளவு காலதாமதப்படுத்தப்பட்டுள்ளது. குழுவிற்கு 18 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, 01.01.2026 ல் ஊதியக்குழ அறிவிப்பு வெளியாகும் என கடந்த ஜனவரி மாதம் மத்திய அரசு அறிவித்தது பொய்யாகியுள்ளது. ஏற்கனவே மேற்கண்ட பல்வேறு ஊதியக்குழுக்களின் காலதாமதமாக அமுலாக்கத்தினால், நிலுவைத்தொகை வழங்கப்படவில்லை. எனவே, 01.01.2026ல் அமுல்படுத்தப்பட வேண்டிய இக்குழுவின் அமுலாக்கம் தாமதப்படுத்தப்படுவதால் நிலுவைத்தொகை கேள்விக்குறியாகியுள்ளது. மேலும், முதலாவது ஊதியக்குழு அமுலாக்கத்திலிருந்து இன்றுவரை வாழ்க்கைத் தேவைக்கான குறைந்தபட்ச ஊதியத்தை வழங்கிட மத்திய, மாநில அரசுகள் மறுத்து வருகிறது. பொருளாதார விலைவாசி ஏற்றத்திற்கு தக்கவாறு ஊதியமாற்றம் நடைமுறைப்படுத்தப்படுவது, ஊழியர்களின் பாதிப்புகளற்ற பரிந்துரைகள், ஓய்வூதியம் போன்ற பல்வேறு பிரச்சனைகளை தீர்;வு காணும் வகையில் இக்குழவின் அறிக்கையை அமுல்படுத்தப்படுவதில் நமது பாதிப்புகளுக்கு தீர்வு காண அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் எடுக்கக்கூடிய அனைத்துவிதமான போரட்ட நடவடிக்கைகளிலும் தேசம் முழுவதிலுமுள்ள அனைத்து மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முழுமையாக பங்கேற்று உரிமைகளையும், ஊதிய மாற்றத்தையும் மீட்டெடுக்க வேண்டியுள்ளது. ●

# 3% அகவிலைப்படி அறிவிக்க வலியுறுத்தி வட்டத் தலைநகர் ஆர்ப்பாட்டம்

**தென் சென்னை**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி தென் சென்னை மாவட்ட கிண்டி அரசு தொழிற்பயிற்சி மையம் முன்பாக அகவிலைப்படி உயர்வை உடனடியாக தமிழக அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தி கிண்டி பகுதி துணை தலைவர் பாரிவள்ளல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பகுதிச் செயலாளர் தோழர் ஜி.ஹரிஹரன் வரவேற்புரை ஆற்றினார். இதில் தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் என்.ரமேஷ், மாவட்ட துணைத் தலைவர் எம் சாலக்குமார், துணைப் பொதுச் செயலாளர் அண்ணா குபேரன் கலந்து கொண்டு கோரிக்கை விளக்கவுரையாற்றினர் நிறைவாக தமிழ்நாடு வேலைவாய்ப்புத் துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் சுந்தரேசன் நன்றிரை கூறினார். சைதை நந்தனம் பகுதி குழு சார்பாக வணிகவரித்துறை அலுவலகம் முன்பு தோழர் கௌரிசங்கர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் திருஞான சம்பந்தம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக சேப்பாக்கம் எழிலகம் வளாகம் எதிரில் தோழர் மாவட்டத் தலைவர் கோபிநாதன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வில் தென்சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் முத்துக்குமார் சுவாமி வேல் விளக்கவுரையாற்றினர், மாவட்ட இணைச்செயலாளர் மகேந்திரன் மற்றும் துறை வாரி சங்க தோழர்கள் கலந்து கொண்டனர், நிறைவாக பகுதி குழு செயலாளர் மகேந்திரன் நன்றியுரை கூறினார்.

**விருதுநகர்**




விருதுநகர் மாவட்டம் ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டக்கிளை சார்பாக தமிழக அரசு உடனடியாக அகவிலைப்படி உயர்வை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஆர்ப்பாட்டம் வட்டக் கிளை தலைவர் பொன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர் வெங்கடேஸ்வரன், திருப்பதி ராஜா மற்றும் மாவட்டச் செயலாளர் கருப்பையா கலந்து கொண்டு கோரிக்கை விளக்கவுரையாற்றினர், வட்டகிளை பொருளாளர் தோழர் இளையராஜா நன்றி கூறினார். ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில செயற்குழு உறுப்பினர் கோபால் தலைமை தாங்கினார், வட்டக்கிளை துணைத் தலைவர் வி.ஆறுமுகம் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியச் சங்க வட்ட கிளைச் செயலாளர் ராஜமாணிக்கம், தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கம் மாவட்ட பொருளாளர் திருப்பதி ராஜ் கலந்து கொண்டு கோரிக்கை

விளக்க வுரையாற்றினர் இந்த நிகழ்வில் ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்கம் சார்பில் தோழர் காளிராஜ் நன்றியுரை கூறினார். அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்டக்கிளை துணைத் தலைவர் பாலமுருகன் கலந்து கொண்டார். சிவகாசி வட்டகிளையில் வட்டக்கிளை தலைவர் தோழர் குமார் பாண்டி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட இணை செயலாளர் தோழர் மணிமாலா, பாண்டியன் மற்றும் திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர்



பெரம்பலூர் மாவட்டம் சார்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் வேப்ப தட்டை வட்டத்தில் வட்டத் தலைவர் டி பழனிச்சாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்டச் செயலாளர் தோழர் சுப்பிரமணியன் கோரிக்கை விளக்க உரையாற்றினார். ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, சாலை பணியாளர்கள் கலந்து கொண்டனர் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலக சங்கத்தின் வட்ட செயலாளர் எஸ். சந்திரசேகர் நன்றி கூறினர்.

### திண்டுக்கல்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு அகவிலைப்படி உயர்வை வழங்க வலியுறுத்தி மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் தோழர் மா.சுகந்தி ஆர்ப்பாட்ட விளக்க உரையாற்றினர் இதில் திரளான ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை



பொள்ளாச்சி வட்டக்கிளையில் வணிகவரித்துறை அலுவலகம் முன்பாக வட்டக்கிளை தலைவர் தோழர் பத்மநாதன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் தோழர் சின்ன. மாரிமுத்து கோரிக்கை விளக்கவுரையாற்றினார். வட்டக்கிளை செயலாளர் தோழர். கிட்டான் நன்றியுரையாற்றினார்.

### நாமக்கல்



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்ட கிளையில் வட்ட கிளை தலைவர் தோழர் கோமதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட துணைத் தலைவர் தாமோதரன் கலந்து கொண்டு கோரிக்கை விளக்க வுரையாற்றினார்.

திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வட்டக்கிளை தலைவர் சிவக்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட தலைவர் தனசேகரன் கலந்து கொண்டு கோரிக்கை விளக்க உரையாற்றினார் மேலும் சமூகநலத்துறை பணியாளர் சங்கத்தின் மாநில செயலாளர் குரு சக்திவேல், சாலை பணியாளர் சங்க மாவட்ட பொருளாளர் மயில்சாமி, வருவாய் துறை அலுவலர் சங்க வட்ட பொருளாளர் சந்தோஷ் அனைத்து துறை வைத்தியசங்க மாவட்ட தலைவர் இளங்கோவன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர் வட்டக்கிளை இணைச் செயலாளர் தோழர் பாஸ்கர் நன்றி கூறினர்.

## திருவள்ளூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பாக திருத்தணி வட்டக் கிளையில் அகவிலைப்படி உடனடியாக தமிழக அரசு வழங்க வலியுறுத்தி பள்ளிப்பட்டு வட்டக்கிளை, பூந்தமல்லி நசரத்பேட்டையில் உள்ள வணிகவரி அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது. கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கரூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கரூர் மாவட்டத்தின் சார்பாக கிருஷ்ணராயபுரம் வட்டக்கிளையில் வட்டக்கிளை துணைத் தலைவர் தோழர் அறிவுக்கண்ணு தலைமையில் தமிழக அரசு அகவிலைப்படி வழங்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வட்டக்கிளை நிர்வாகிகள் தனலட்சுமி, வட்டச் செயலாளர் சண்முகப்பிரியா, தோழர் தங்கராஜ், தோழர் பிரசாந்த், அசோக்குமார், தமிழ்மணி கலந்து கொண்டனர். நிறைவாக மாநில துணை தலைவர் மு. செல்வராணி நிறைவுரையாற்றினார். சத்து சத்துணவு ஊழியர் சங்க ஒன்றிய தலைவர் தமிழரசி நன்றி கூறினார்.

## நாகப்பட்டினம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மூன்று சதவீத அகவிலைப்படையை தீபாவளி பண்டிகைக்கு முன்பாக அறிவித்திட கோரி மாவட்ட தலைவர் தோழர் அற்புதராஜ் ரூஸ்வெல்ட் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஸ்ரீதர் கோரிக்கை விளக்க உரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பா. அன்துவன் சேரல் மாவட்ட இணை செயலாளர் ஜெ.சம்ருத் நிஷா கோரிக்கை விளக்கவுரையாற்றினர். நிறைவாக வட்டச் செயலாளர் தோழர் கே ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## விழுப்புரம்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்ட கிளையில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு வட்டத் துணைத் தலைவர் தோழர் வி சுரேஷ்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் மணிமாறன் வரவேற்பு உரையாற்றினார். தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கமாவட்ட இணை செயலாளர் தோழர் பார்த்திபன் வாழ்த்துரை வழங்கினர். தோழர் சுந்தரபாண்டியன், தோழர் மணிகண்டன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நிறைவாக மாவட்ட தலைவர் சரவணன் கலந்து கொண்டு நிறைவுரையாற்றினர். தோழர் வனிதா நன்றி கூறினார். மரக்காணம் வட்ட கிளையில் மதிய உணவு இடைவெளியில் வட்டத் தலைவர் தோழர் நூர்ஜகான் தலைமையில் ஆர்ப்பாட்டம் மிக எழுச்சியாக நடைபெற்றது.

கண்டாச்சிபுரம் வட்டக் கிளையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வட்டத் தலைவர் தோழர் சிவராமன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தோழர் பாலாஜி, தோழர் ஆறுமுகம், தோழர் சுதாகர், தோழர் ஜெயந்தி மற்றும் துறை வாரி சங்கத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். விக்கிரவாண்டி வட்டக்கிளை பேரூராட்சி அலுவலகம் முன்பு வட்டத் தலைவர் ராஜேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## வேலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், வேலூர் மாவட்டத்தின் சார்பாக வேலூர் வடக்கு வட்டக் கிளையில் மாவட்ட ஆட்சித் தலைவர்



அலுவலகத்தில் தோழர் ஜோஷி அவர்களின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் தீனதயாளன் மற்றும் துறை வாரி சங்கத் தோழர்கள், ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோசப் அன்னையா, ஜெயகாந்தன், சினேக லதா, மீரா கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

## திருப்பூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்ட முடிவின்படி அரசு ஊழியர்களுக்கு 01-07-2025 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படியினை உடனே வழங்க வேண்டும் அகவிலைப்படியினை தீபாவளிக்கு முன்னதாக விரைந்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் -10 ஆண்கள்- 25 மொத்தம் -35 பேர் கலந்து கொண்டனர். திருப்பூர் தெற்கு, வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 12 ஆண்கள். 10 மொத்தம் 22 பேர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் -10 ஆண்கள்.

-10 மொத்தம் 20 பேர் கலந்து கொண்டனர். அவினாசி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 15 ஆண்கள். 16 மொத்தம் 31- பேர் கலந்து கொண்டனர் ஊத்துக்குளி வட்டாட்சியர் அலுவலகம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 10 ஆண்கள். 10 மொத்தம் 20 பேர் கலந்து கொண்டனர். காங்கேயம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள்- 6 ஆண்கள். -15 மொத்தம் 21- பேர் கலந்து கொண்டனர் தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 35 ஆண்கள். 40 மொத்தம் 75 பேர் கலந்து கொண்டனர்.

மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 15 ஆண்கள். 10 மொத்தம் 25 பேர் கலந்து கொண்டனர். உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 35 ஆண்கள். 19 மொத்தம் 64 பேர் கலந்து கொண்டனர். பல்லடம் வட்டாட்சியர் அலுவலகம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 05 -ஆண்கள். 15 மொத்தம் 20 பேர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், திருவாரூர் மாவட்டத்தின் சார்பாக திருவாரூர் ,நன்னிலம், வலங்கைமான், திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், முத்துப்பேட்டை, கூத்தாநல்லூர், குடவாசல் மற்றும் மன்னார்குடி வட்ட கிளையில் ஆர்ப்பாட்டங்கள் வட்ட தலைவர் தலைமையில் நடைபெற்றது. கூத்தாநல்லூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் தோழர் செங்குட்டுவன் கலந்து கொண்டு கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மன்னார்குடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் செ. பிரகாஷ் கலந்து கொண்டு கோரிக்கை விளக்கவுரையாற்றினார். திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் தோழர் சுதாகர் கலந்து கொண்டு கோரிக்கை விளக்கவுரையாற்றினார். இந்த நிகழ்வில் வட்டக்கிளை மாற்றும் மாவட்ட நிர்வாகிகள் தோழமைச்சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், மயிலாடுதுறை மாவட்டத்தின் சார்பாக மாநில செயற்குழு முடிவின்படி 3% அகவிலை படி உயர்வை உடனடியாக வழங்க வேண்டி சீர்காழி, தரங்கம்பாடி, குத்தாலம் வட்ட அலுவலகங்களில் மதியநேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாலை நேர ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் தோழர் ஆர்.கலா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர் டி. இளவரசன் கோரிக்கை விளக்க உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் சீர்காழி வட்டச் செயலாளர் அருள்பெருமாள், வருவாய்த்துறை மாவட்ட செயலாளர் தோழர் எஸ்.தென்னரசு, சாலை பணியாளர் சங்க மாவட்ட தலைவர் எஸ் ரமேஷ், தோழர் ராமதேவன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். நிறைவாக தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்க மாநிலச் செயலாளர் ராமகணேசன் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் கே.ஜவஹர் நன்றியுரை கூறினர்.

அரியலூர்



காஞ்சிபுரம்




திருவண்ணாமலை



தஞ்சாவூர்



ஈரோடு



சிவகங்கை



கிருஷ்ணகிரி



தேனி



கள்ளக்குறிச்சி



தென்காசி



# 10 அம்ச கோரிக்கை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ கோரிக்கை அட்டை அணிந்து ஆர்ப்பாட்டம்

### விருதுநகர்



ஜாக்டோ ஜியோ வின் சார்பாக கொட்டுமலையில் பத்து அம்ச கோரிக்கையை அட்டையை அணிந்து வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அரசு ஊழியர் ஆசிரியர்கள். ஜாக்டோ ஜியோ சார்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் முன்பு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது இதில் தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆண்டாள், தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தோழர் கருப்புசாமி, தோழர் சீனிவாசன் தோழர் பொன்ராஜ் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். நிறைவாக ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் கருப்பையா சிறப்புரை ஆற்றினார் நிறைவாக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் குமார் நன்றி கூறினார்

### அரியலூர்



அரியலூர் மாவட்டம் ஜாக்டோ ஜியோ சார்பாக தமிழக அரசு தேர்தல் கால வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி அரியலூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பும், உடையார்பாளையம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் ,அரியலூர் ஊரக வளர்ச்சி அலுவலகம் முன்பும் ஆண்டிமடம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பும், செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பும் ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட தலைவர் தோழர் வேல்முருகன் உள்ளிட்ட ஆசிரியமைப்பினுடைய அனைத்து தோழர்களும் அரசு ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை



ஜாக்டோ ஜியோ மயிலாடுதுறை மாவட்டம் சார்பாக தமிழக அரசு 2021 ஆம் ஆண்டு தேர்தல் கால வாக்குறுதியான பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கை வலியுறுத்தி கோரிக்கை அட்டை அணிந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இளவரசன்,செல்வம், சண்முகசுந்தரம், ஆதிஸ்வரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சீர்காழி, தரங்கம்பாடி, குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அரசு ஊழியர் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தின் ஜாக்டோ ஜியோ சார்பாக தமிழக அரசு தேர்தல் கால வாக்குறுதியாக வழங்கிய பழைய ஓய்வூதியம் திட்டம் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை அட்டை அணிந்து மன்னார்குடி, திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நீடாமங்கலம், நன்னிலம், திருத்துறைப்பூண்டி, கூத்தநல்லூர் உள்ளிட்ட வட்ட கிளைகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் சுதாகர், மாவட்ட செயலாளர் செங்குட்டுவன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் மேலும் ஆசிரியர் சங்கங்களின் சார்பாக மன்றம் சார்பாக பெ.ரா ரவி ,தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழகம் சார்பாக மாநில பொருளாளர் துரைராஜ், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக மாநில செயலாளர் செ.பிரகாஷ், துணைப் பொதுச் செயலாளர் வெ. சோமசுந்தரம் கல்லூரி பேராசிரியர் சார்பாக முருகானந்தம் உள்ளிட்ட மாநில, மாவட்ட ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என திரளான தோழர்கள் கலந்து கொண்டு கோரிக்கை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## புதுக்கோட்டை




## கள்ளக்குறிச்சி



## காஞ்சிபுரம்



## கரூர்



## கோவை



## கிருஷ்ணகிரி



## திருவாரூர்



திருச்சி



திருப்பூர்



நாகப்பட்டினம்



திருவள்ளூர்



கன்னியாகுமரி



விழுப்புரம்



நீலகிரி



திருவண்ணாமலை



பெரம்பலூர்



தருமபுரி



**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**

**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/64)

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமாரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் வில்லி புஷ்பம்**


ஊடகச் செய்தி: 12 / 2025 நாள்: 24.10.2025

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் தோழர்.மு.பாஸ்கரன் மற்றும் பொதுச்செயலாளர் தோழர்.மு.சீனிவாசன் ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிக்கை செய்தி.

# கண்களை விற்று ஓவியம் வாங்கும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை தனியார்மயமாக்கும் முயற்சி

தமிழ்நாடு அரசின் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் (17.10.2025) அன்று தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தம் கொண்டு வந்ததன் மூலம் அரசு உதவி பெறும் கல்லூரிகளை அரசின் தலையீடுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் முயற்சியாக அறிவித்துள்ளது. Brownfield University என்ற புதிய வகை பல்கலைக்கழகங்களாக உருவாக்கிட அனுமதித்துள்ளது. இது தமிழ்நாடு வளர்ச்சியில் மிகப்பெரிய இழப்பை, பின்னடைவை சந்திக்கும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இச்சட்டம் சமூக நீதி மற்றும் இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிரானது என்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இந்திய அளவில் பொருளாதாரத்தில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் 11.19 % வளர்ச்சி கண்டுள்ளது. இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது பொருளாதார மாநிலமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் ஆண்டு வருமானம் ரூ.2.78 லட்சம். ஆனால், தேச தனிநபர் ஆண்டு வருமானம் ரூ.1.69 லட்சம் மட்டுமே. இந்தியாவின் டெட்ராய்டாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. தொழிற்சாலைகளில், நிறுவனங்களில் உழைக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் இந்தியாவில் தமிழ்நாடு 33.31 % நிவர்த்தி செய்கிறது. இதற்கு பிரதான காரணம் கல்வியில் மிகப்பெரிய வாய்ப்பாக தொன்றுதொட்டு தமிழ்நாடு வளர்ந்துள்ளது. இது உடனடியான வளர்ச்சியல்லை. தேசம் சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் பொதுப்பார்வையாளர்கள், சமூக ஆர்வலர்கள், **கல்விக்குக் கொடுப்பதை, கடவுளுக்கு கொடுப்பதாக** எண்ணி பெரியோர்கள் கல்வி வளர்ச்சியில் மிகப்பெரிய அளவில் உதவியிருக்கிறார்கள். இன்றைக்கு அரசின் மிகப்பெரிய கல்வி நிறுவனங்களாக உயர்ந்துள்ள கல்வி நிறுவனங்கள் கல்விக் கொடையாளர்களின் அன்பளிப்பால் வழங்கப்பட்டவையாகும்.

தமிழ்நாட்டில் சுமார் 58,722 பள்ளிகளில் பயிலும் 1.29 கோடி மாணவ, மாணவிகள் அதில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 82.9 சதவீதம் பேர் படித்து மேல் படிப்பிற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வாய்ப்பு வழங்கும் கல்லூரிகளாக அரசுக் கல்லூரிகள் மட்டும் இருந்தால் மட்டும் போதாது. அரசு உதவி பெறும் கல்லூரிகள் பேருதவியாக இருந்து வருகிறது. இவற்றிலிருந்து அரசு தன்னை விடுவித்துக்கொள்ளும் முயற்சி என்பது தனியார் கல்லூரிகளாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்படுவது ஏழை, எளிய மாணவர்களே. இதனால் மாநிலத்தின் கல்வியின் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, பொருளாதார ரீதியாக ஈடு செய்ய இயலாமல் உயர்கல்வி என்பது தடைபடக்கூடிய நிலை உருவாகும் அபாயம் உள்ளது.

கல்வியில் இன்று அரசுப்பள்ளிகள் இருப்பதனாலேயே, ஏழை மாணவர்களின் கல்வி வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகிறது. இதனால் சமூக நீதி பாதுகாக்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக ஒரு மனிதன் உயரும் போதுதான் அவனுக்கு உண்மையான சமூகநீதி கிடைக்கப்பெறுகிறது. பொருளாதார ரீதியாக சமூகம் உயர்வதற்கு கல்விதான் மிகப்பெரிய ஆதாரம். அது தமிழ்நாட்டில் ஆரம்பக்கல்வி முதற்கொண்டு பட்டப்படிப்பு வரை கிடைக்கப்பெறுவதால் தான் கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என அனைத்து நிலைகளிலும் தமிழ்நாடு உயர்ந்து விளங்கிட முடிகிறது. இதன் ஒரு கதவு மூடப்பட்டால் அனைத்தும் தடைபடும் என்பதை அரசு உணர வேண்டும்.

மருத்துவக் கல்விக்கான நீட் நுழைவுத் தேர்வை தமிழ்நாடு அரசு எதிர்ப்பதற்கு மிகப்பெரிய காரணமாக இருப்பது தனியார் மற்றும் கார்ப்பரேட் கல்வி நிறுவனங்களின் கட்டணக் கொள்ளைகளே. பள்ளிகளில் தேர்ச்சிபெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டு, போட்டித்தேர்வுகள் மூலம் தேர்வு செய்யப்படுவதால், பள்ளிகளில் தேர்வு மதிப்பெண்கள் இரண்டாம் பட்சமாக பார்க்கப்படுகிறது. தனிப்பட்ட கோச்சிங் சென்டர்களில் பல இலட்சங்கள் கொடுத்து போட்டியிடும் பொருளாதார நிலை இல்லாத ஆனால், திறமையும், ஆர்வமும் உள்ள ஏழை, எளிய மாணவ, மாணவிகள் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். பல அனிதாக்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிகழ்வுகளும் இன்றும் நடைபெற்று வருகிறது.

கடந்த காலங்களில் பல்வேறு ஆட்சியாளர்கள், பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்தாலும் கல்வியில் எந்தவித சமரசமுமின்றி அனைவருக்கும் கல்வியை, உயர்கல்வி வரை கொண்டுசென்றது மிகப்பெரிய வாய்ப்பாகும். அதில் மக்கள் சிந்தனையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பெரியோர்கள் என பலரும் தங்களது சொத்துக்களை கொடுத்து தமிழ் சமூகத்திற்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு உதவினார்கள். அவ்வாறு கட்டமைக்கப்பட்டதுதான் பழம்பெரும் கல்லூரிகள். அந்தப்பணி தடைபட்டுவிடக் கூடாது என்று ஆட்சியாளர்களால் தொடர்ந்து அரசு உதவி பெறும் கல்லூரிகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரசின் தலையீடு காரணமாக குறைந்த கட்டணம் அல்லது கட்டணமின்றியும் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்கள் அனுபவம் வாய்ந்த மற்றும் தலைசிறந்த கல்வியை வழங்கி வருகிறார்கள். இந்த நிலையை பாதுகாப்பதில் ஆசிரியர் அமைப்புகள், மாணவர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் முயற்சியும், போராட்டங்களும் மகத்தானது. பொதுவான கோரிக்கைகளுக்காக அனைவரும் இணைந்து போராடினால் வெற்றி இலக்கு நிச்சயம் என்பதற்கு 1970ல் நடைபெற்ற அப்போராட்டங்கள் சாட்சியாகும். இதனால் ஆசிரியர்க்கும் நிரந்தரமான பணி, நிலையான ஊதியம், பணி நியமனங்களில்

இட ஒதுக்கீடு உள்ளிட்ட அரசின் அனைத்து விதமான உரிமைகளும் நிலைநாட்டப்பட்டன. கல்லூரிகளும் அரசின் நிதி உதவி காரணமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

அவ்வாறு 1970 களில் கல்லூரிகள் நிதி நெருக்கடியில் இருந்த போது மாநில அரசின் நிதி உதவி, மக்களின் வரிப்பணம், மத்திய UGC நிதி ஆகியவற்றின் நிதி உதவி காரணமாக இன்றும் தனித்துவமாக செயல்பட்டு கல்விப்பணியாற்றி வருகின்றன. அதனால் அக்கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது தமிழ்நாடு அரசின் சட்டத்திருத்தத்தால் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்றும் திட்டம் என்பது மீண்டும் சமூகநீதியற்ற மற்றும் படிப்பறிவற்ற இளைஞர்களை உருவாக்கும் மிக மோசமான சூழலுக்கு தள்ளப்படும் அபாயம் உள்ளது. இதனால் அக்கல்வி நிறுவனங்களில் கல்வியின் தரத்தை மேற்பார்வையிடும் அரசின் அதிகாரம் குறைக்கப்பட்டு, கல்வியின் தரம் பாதிக்கும் அபாயம் உள்ளது. நிதிச்சுமையை காரணம் காட்டி தமிழ்நாடு அரசின் அரசு பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடு நிலுவைப்படுத்தப்பட்டு வருவதையும் தவிர்த்திட வேண்டும். இதுபோன்ற இலாப நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் கல்வி நிறுவனங்களை பலவீனப்படுத்தும், அதே சமயம் மாநில வளர்ச்சியையும் தடை செய்யும் நடவடிக்கையாகும்.

இச்சட்டத்தை அறிமுகப்படுத்தும் போது, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், சர்வதேச தரமான பல்கலைக்கழகங்களை உருவாக்கும் நோக்கத்தில் இச்சட்டத்திருத்தம் கொண்டுவரப்படுவதாக அறிவித்தார். அரசால் மட்டுமே தரமான உயர்கல்வியை தர முடியும் என்பதற்கு IIT, AIMS, மத்திய பல்கலைக்கழகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்கள் சான்றுகளாகும். தனியார் நிர்வாகம் என்பது இலாப நோக்கோடு மட்டுமே செயல்படுமே தவிர, சேவை மனப்பான்மை கொண்டிருக்காது. எனவே, தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் மாநில வளர்ச்சிக்கும், எதிர்காலத்திற்கும் ஆபத்தான இச்சட்டத்தை திரும்பப்பெற வேண்டுமென தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

மாநிலத்தலைவர்

பொதுச்செயலாளர்

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

(Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

நாள்: 23.10.2025

## மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்ட முடிவுகள்

ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் காணொலி வாயிலாக (Online) 23.10.2025 அன்று மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர்.மு.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஜாக்டோ-ஜியோ சார்பாக கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர்கள் கோரிக்கைகள் மற்றும் தமிழ்நாடு அரசின் நிலைபாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட பத்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ சார்பாக 08.10.2025 அன்று ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் தொடர் போராட்ட இயக்க நடவடிக்கைகள் முடிவெடுக்கப்பட்டது. ஆயினும் இயற்கை சீற்றத்தின் காரணத்தால் நாம் எடுத்துள்ள கீழ்கண்ட முடிவுகளை தொய்வின்றி, வெற்றிகரமாக நடத்திட அனைத்து அமைப்புகளும் தங்களது மாநில மையத்தின் சார்பாக அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர்களிடம் கொண்டு சென்று மிக எழுச்சியோடு பங்கேற்க வைப்பது என முடிவெடுக்கப்பட்டது.

## கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்கால இயக்க நடவடிக்கைகள்

**01.11.2025-ஜாக்டோ-ஜியோ உயர் மட்டக்குழு கூட்டம், திருச்சி:**

உயர்மட்டக் குழு கூட்டத்தை வருகிற 01.11.2025 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணிவரை திருச்சியில் இரயில் நிலையத்திற்கு எதிரே உள்ள அருண் ஹோட்டல், சுமங்கலி ஹாலில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இக்கூட்டத்தில் அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர் சார்பாக அனைத்து உயர்மட்டக்குழு தோழர்களும் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**10.11.2025 முதல் 14.11.2025 வரை மாவட்ட அளவிலான வாகன பிரச்சார இயக்கம்:**

பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் உள்ள அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர்களை சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அரசின் காலதாமதத்தையும், கோரிக்கைகள் நிறைவேற்றிட போராட்டத்தின் நோக்கம் குறித்தும், அதில் பங்கேற்பதன் அவசியம் குறித்தும் மாவட்ட அளவில் ஜாக்டோ-ஜியோ சார்பாக **10.11.2025 முதல் 14.11.2025 வரை வாகன பிரச்சார இயக்கம்** விரிவாக நடத்துவது.

18.11.2025 அன்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம்:

பழைய ஓய்வூதியத்திட்டத்தை உடனே அமுல்படுத்திட வேண்டும் உள்ளிட்ட பத்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழ்நாடு அரசை வலியுறுத்தி இலட்சக்கணக்கான அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர்கள் பங்கேற்கும் **ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்** வெற்றிகரமாக நடத்திடுவது.

அதன்பிறகும் தமிழ்நாடு அரசு கோரிக்கைகளை நிறைவேற்றவில்லையென்றால் காலவரையற்ற வேலை நிறுத்தம் உள்ளிட்ட அடுத்தகட்ட போராட்ட நடவடிக்கைக்கு செல்வது குறித்து மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை கூட்டி முடிவெடுக்கப்படும்.

மேற்கண்ட முடிவுகளை மாவட்டங்களில் முழுமையாகவும், எழுச்சிகரமாகவும் நிறைவேற்றிட **மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை** உடன் கூட்டி திட்டமிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## கோரிக்கைகள்:

- 01.04.2003 க்குப்பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டம் உடன் அமல்படுத்திட வேண்டும்.
- ஆசிரியர் தகுதித்தேர்வு (**TET**) குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பினைக் காரணம் காட்டி 23.08.2010 க்கு முன்னதாகப் பணியேற்ற ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்து (**TET** தேர்விலிருந்து விலக்களித்து) ஆசிரியர்களை பாதுகாத்திட தமிழ்நாடு அரசு சீராய்வு மனு உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- இடைநிலை ஆசிரியர்களுக்கு, முதுகலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும்.
- தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக்கல்வித்துறை அரசாணை எண்.243, நாள்:21.02.2023 மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையில் அரசாணை எண்.76, நாள்: 30.09.2024 ஆகியவற்றை உடனடியாக ரத்து செய்திட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச்செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாட்டினைக்களைய வேண்டும். கல்லூரிப் பேராசியரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (CAS), பேராசிரியர் பணி மேம்பாடு, ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய்கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப்பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் MRB செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், அரசு தொழிற்பயிற்சி நிலைய PPP & COE ஊழியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

- அரசின் பல்வேறு துறைகளில் 30% மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்காக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான உச்சவரம்பினை 5% மாக குறைக்கப்பட்டதை ரத்து செய்து மீண்டும் 25% மாக வழங்கிட வேண்டும்.

- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத்தொகை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப்பணியாளர்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டும்.

- 2002 முதல் 2010 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்களின் பணிக்காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்.

- சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்திட வேண்டும்.



# வாழ்த்துக்கள்




திருநெல்வேலி மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாற்றுத்திறனாளி துணைக் குழுவின் அமைப்பாளரும், தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளருமான தோழர். இ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற மாற்றுதிறனாளிகளுக்காக மாநில அளவிலான பாரா ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் 200 மீட்டர் (INDIVIDUAL MEDLEY) பிரிவில் வெள்ளிப் பதக்கமும், 50 மீட்டர் (BUTTERFLY STROKE) பிரிவில் வெண்கல பதக்கமும்,மேலும்50 மீட்டர் (Back STROKE) பிரிவில் வெண்கல பதக்கமும் பெற்றுள்ளார்.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில மையத்தின் சார்பாக வாழ்த்துக்கள். ●

கட்டுரை

# நவீன உழைப்புச் சுரண்டலின் புதிய வடிவங்கள்

- அ சவுந்தரராசன்

உலக நாடுகள் முழுவதும் சுரண்டல் நடைபெறுகிறது. இந்தியாவிலும் சுரண்டலுக்கு எதிரான போராட்டம் தொடர்கிறது. தமிழகத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பு தொழிற்சாலைகளில் 100 சதவீதம் நிரந்தர தொழி லாளர்கள் இருந்தனர். உற்பத்தி பிரிவில் ஒரு ஒப்பந்த தொழிலாளி கூட இல்லை. கடந்த 50 ஆண்டுகளில் நிலைமை தலைகீழாக மாறி யுள்ளது. நிரந்தர தொழிலாளர்களை விட ஒப்பந்த தொழிலாளர்கள் பல மடங்கு அதிகரித்துள்ளனர். இந்தியாவில் 3 சதவீத தொழிலாளர்கள் மட்டுமே உற்பத்தித் துறையில் உள்ளனர். 97 சதவீத தொழி லாளர்கள் முறைசாரா, சட்டங்கள் பொருந்தாத தொழிலாளர்களாக உள்ளனர். இந்த 3 சதவீத தொழிலாளர்கள்தான் நாட்டின் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளனர். இவர்களுக்கு பணி நிரந்தரம், பணி பாதுகாப்பு இருந்தால் முதலாளிகளால் விரும்பியபடி உழைப்பை உறிஞ்ச முடியவில்லை. லாபம் அதிகரிக்க வேண்டுமானால், ஓய்வின்றி வேலை வாங்க வேண்டும், வேலை நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்று முதலாளிகள் முடிவு செய்துள்ளனர்.

### சட்ட மாற்றங்கள்

எனவேதான், ஒன்றிய அரசின் 4 தொழிலாளர் சட்ட தொகுப்புகளில் வேலை நேரத்தை 8லிருந்து 12 மணி நேரமாக உயர்த்தியுள்ளது. சட்ட தொகுப்புகளை கொண்டு வந்து 4 ஆண்டுகளாகியும் அறிவிக்கை செய்ய முடியாத வகையில் ஒன்றிய அரசை தொழிலாளி வர்க்கம் தடுத்து நிறுத்தி வைத்துள்ளது. எனவே, இந்த தொகுப்புகளில் உள்ள தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான, தீய பிரிவுகளை, தற்போ துள்ள சட்டங்களை திருத்துவதன் மூலம் செயல் படுத்த முயற்சிக்கின்றனர். உதாரணமாக, தமிழகத்தில் கடைகள் மற்றும் நிறுவனச் சட்டத்தை அரசு திருத்தியுள்ளது. சட்டத்திற்கு முரணாக முதலாளி செயல்பட்டால் 6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்படும் என்பதை நீக்கி, அபராதம் மட்டுமே செலுத்தினால் போதும் என்று மாற்றியுள்ளனர். இப்படி பல திருத்தங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

### ஒப்பந்த முறையின் விளைவுகள்

நவீன முறையில் சுரண்டலைச் செய்ய, சுரண்டலை தீவிரப்படுத்த தொழிலாளிக்கு பணி பாதுகாப்பு, பணி நிரந்தரம், சட்ட பாதுகாப்பு, நீதிமன்றத்தை நாடும் உரிமை போன்ற எந்த உரிமையும் இருக்கக் கூடாது என்று முதலாளிகள் விரும்புகின்றனர். முதலாளி விரும்பினால் வேலைக்கு அமர்த்தலாம், விரும்பாவிடில் துரத்திவிடலாம் என்ற நிலை இருக்க வேண்டும் என்பது அவர்களது நோக்கம். இதற்கு தொழிலாளிகள், தொழிற்சங்கங்களி டமிருந்து கடும் எதிர்ப்பு வருகிறது. எனவே, தொழிலாளிகளின் தன்மையையே மாற்றுகின்றனர். நிரந்தர தொழிலாளி என்ற நிலைக்கு மாற்றாக காண்ட்ராக்ட், ஒப்பந்தம், காஷுவல், பயிற்சியாளர் என நிரந்தரமற்ற தொழிலாளிகளை உருவாக்கி, அதிகரித்து வருகின்றனர். இதன் விளைவாக, ஒரு தொழிற்சாலையில் 100 நிரந்தர தொழிலாளி இருந்தால் 1000 ஒப்பந்த தொழிலாளி உள்ள நிலை உள்ளது. அசோக் லேலண்டில் 30 ஆண்டுகளுக்கு முன்பைவிட 3 மடங்கு உற்பத்தி அதிகரித்துள்ளது. லாபம் குவிகிறது. ஆனால், நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கை 8,000லிருந்து 1,200ஆக குறைந்துவிட்டது. காண்ட்ராக்ட் தொழிலாளர் எண்ணிக்கை 9,000ஆக உள்ளது. இதுதான் இன்றைய தொழிற்சாலைகளின் நிலை. அரசு அலுவலகங்கள், நிறுவனங்களிலும் ஒப்பந்த முறைதான் அமல்படுத்தப்படுகிறது. வல்லூர் அரசு அனல் மின்நிலையத்தில் பணியாற்றும் 2,000 பேரும் ஒப்பந்த தொழிலாளர்கள். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலும் இதே நிலைதான்.

**புதிய சுரண்டல் முறைகள்**

நவீன சுரண்டலின் முக்கிய கருவியாக ஒப்பந்த முறை உள்ளது. ஒப்பந்த தொழிலாளி என்றால் கூட சம வேலைக்கு சம ஊதியம் போன்ற சில பாதுகாப்புகள் உள்ளன. எனவே, பயிற்சியாளர் (அப்பரண்டிஸ்), உற்பத்தியில் பயிற்சி பெறக்கூடிய தொழிலாளி (நாப்ஸ்) போன்ற திட்டங்களை அமல்படுத்துகின்றனர். இந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் ஒரு பகுதியை அரசு தருகிறது. இப்படியாக தொழிற்சாலைகளில் பயிற்சி, காண்ட்ராக்ட், காஷுவல், நாப்ஸ் போன்ற பெயர்களில் தொழிலாளர்கள் மிகக் கடுமையாக சுரண்டப்படுகின்றனர். உழைப்பு திருட்டுக்கு உள்ளாகின்றனர். ஓலா, உபேர், ஸ்விக்கி போன்ற இணையம் சார்ந்த தொழில்களில் 'ஜிக்' தொழிலாளர்களாக (செயலி வழித் தொழிலாளர்) கோடிக்கணக்கானோர் உள்ளனர். முறைசாரா தொழிலாளர்களுக்கு கிடைக்கும் சிறு சிறு சட்ட பாதுகாப்பு கூட இந்த தொழிலாளர்களுக்கு இல்லை. வண்டியும் உழைப்பும் தொழிலாளியு டையது. செயலியை மட்டும் வைத்துக்கொண்டு உழைப்பை வாங்குவதோடு, தொழிலாளிக்கு கிடைக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதியையும் எடுத்துக் கொள்கின்றனர். அடிமைத்தனத்தை விட மிக மோசமான கொள்ளையாக இது உள்ளது. இதை அனைத்து தொழில்களிலும் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

**போராட்ட எழுச்சி**

இந்த நவீன சுரண்டலுக்கு எதிராக தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராடத் தொடங்கியுள்ளனர். அரசும் முதலாளிகளும் ஒப்பந்த முறையில் இருந்தால் தொழிலாளர்கள் சங்கம் சேர முடியாது, விருப்பம் போல் சுரண்டலாம் என்ற கனவு பொய்த்துவிட்டது. வல்லூர் அரசு அனல் மின்நிலையத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கம் அமைத்துவிட்டார்கள். பணி நிரந்தரம் கோரி 17 நாள் பிரம்மாண்ட வேலைநிறுத்தம் செய்தனர். அடக்குமுறை பலனளிக்கவில்லை; எனவே நிர்வாகம் ஊதிய உயர்வு தந்துள்ளது. ஆனால், பணி நிரந்தரம் என்ற கோரிக்கைக்காக மீண்டும் வேலை நிறுத்தத்திற்கு தயாராகி வருகின்றனர். காண்ட்ராக்ட் உள்ளிட்ட எந்த பெயரில் தொழிலாளிகளை வைத்து நவீன சுரண்டல், உழைப்பு திருட்டுக்கு உட்படுத்தினாலும், அதனை எதிர்த்து முறியடிக்க ஒன்றுபடுத்திக் கொண்டு தொழிலாளிகள் போராடு வது, தவிர்க்க இயலாத இயக்கவியல். இதுதான் மார்க்சியம். பஞ்சாலைகளிலும் இத்தகைய நவீன சுரண்டல் நிகழ்கிறது. பாக்ஸ்கானில் பணியாற்றிய 15,000 இளம் பெண்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு 2 நாட்கள் பெங்களூரு நெடுஞ்சாலையை மறித்தனர். இதுதான் தன்னெழுச்சியான வர்க்கப் போராட்டம்.

கோரிக்கை என்ன? தலைமை யார்? போராட்டத்தை எப்போது முடிப்பது? என்ற எந்த தெளிவும் இல்லாத அந்த தன்னெழுச்சிப் போராட்டம் நடைபெற்றது. இத்தகைய போராட்டங்கள் இலக்கை அடையாது. இத்தகைய போராட்டங்கள் நடைபெறும்போது தலையிட்டு முறைப்படுத்தி கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். இந்தியா முழுவதும் சுரண்டலை எதிர்த்த தன்னெழுச்சிப் போராட்டங்கள் வெடிக்கும் வெடிப்புச் சூழல் நிலவுகிறது. பல நாடுகளில் வெடித்து நெடும் போராட்டமாக நடந்து கொண்டிருக்கிறது.

தன்னெழுச்சிப் போராட்டங்களை முறைப்படுத்தி கொண்டு செல்ல நாம் தவறும்பட்சத்தில் சீர்திருத்த வாதிகளால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.அவர்கள், தொழிற்சங்கங்கள் மீது தொழிலாளர்களுக்கே அவநம்பிக்கையை உண்டாக்குகின்றனர். தகவல் தொழில்நுட்ப தொழிலாளர்கள் சங்கம் வைக்க உரிமை உள்ளது என்று நீதிமன்றம் கூறி விட்டது. ஆனாலும் சங்கம் அமைக்க முடியவில்லை. தொழில் நிலைமை காரணமாக பெங்களூரில் ஐடி தொழிலாளர்கள் போராடுகின்றனர். ஏஐ, ரோபோட்டிக் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பது, தொழிலாளர் எண்ணிக்கையை குறைப்பது என்று முதலாளிகள் சிந்திக்கின்றனர்

எனவே, நவீன சுரண்டலுக்கு எதிராக அனைத்து வகையான ஒப்பந்த, நிரந்தரமற்ற தொழிலாளர்களை அணி திரட்ட வேண்டும். நவீன சுரண்டலுக்கு எதிராக தொழிலாளர்கள் தங்களை ஒன்றுப்படுத்திக் கொண்டு முதலாளிகளுக்கு எதிராக போராடும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதை பொருத்தமாக பயன்படுத்த வேண்டும். ●

# நில அளவை மூலம் வருவாய்த் துறையில் நுழையும் தனியார் மயம்

**- அண்ணா. குபேரன்**

மக்கள் நலத் திட்டங்களுக்காக கொண்டுவரப்படுகிற தமிழ்நாடு அரசின் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம், உங்களைத் தேடி உங்கள் ஊரில், உங்களுடன் ஸ்டாலின், அரசாணை 97 போன்ற சிறப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இலவச வீட்டு மனை பட்டா பணிகள், புதிய திட்டங்களுக்கான நிலம் எடுப்பு, நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக உள்ள அரசாணை 540 மீதான பணிகள், உயர் அலுவலர்களின் புலத் தணிக்கை மற்றும் ஆய்வுக் கூட்டங்கள், நீதிமன்ற வழக்குகளுக்கு ஆஜராகுதல், நவீன மறு நில அளவைப் பணி உள்ளிட்ட பணிகள் அதிகம் உள்ளது. இப் பணிகள் அனைத்தையும் மிக குறைவான எண்ணிக்கையில் உள்ள சர்வேயர்கள் மட்டுமே செய்து முடிக்க வேண்டியுள்ளது.

தற்போது சென்னையில் மட்டும் நத்தம் வகைப்பாட்டு நிலங்களில் 15000 உரிமையாளர்களுக்கு நில வரித் திட்ட பணியின் மூலம் பட்டா வழங்க அரசாணை 518-ன் படி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். தற்போதைய நிலையில் ஒரு மனையில் இருவர் கிரையம் பெற்றிருந்தால் 30000 உரிமையாளர்களாக இரட்டிப்பாகக் கூடும். ஆனால் இப் பணிகளை செய்திட புதிய நில அளவைப் பணியிடங்கள் உருவாக்கபடவில்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பணியாளர் எண்ணிக்கையை கொண்டே செய்து வருகின்றன. எவ்வித புதிய பணியிடங்களை அரசு உருவாக்கவில்லை.

நிலங்களின் பராமரிப்புப் பணிகளை தொடர்ந்தவாரே தற்போதைய நான்கரை ஆண்டு கால ஆட்சியில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 15 இலட்சம் இணைய வழி பட்டாக்கள் இப் பணியாளர்களின் அயராத உழைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதல்வரின் அறிவிப்பின்படி ஏழை எளிய மக்களுக்கு 19 இலட்சம் இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கியது இத் துறையின் இமாலய சாதனை.

நகர் சூழ்ப் பகுதிகளில் உள்ள ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் 86 ஆயரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பட்டா வழங்க தேவையான அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் 5 இலட்சம் பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் வெகுவாக பாராட்டிப் பேசியுள்ளது ஊழியர்களுக்கான அங்கீகாரமாகும்.

தற்போது நக்சா திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டம் நகர்ப்புற நிலப் பதிவுகளை நவீனமயமாக்குவதற்காக, புவிசார் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு திட்டமாகும். இது செங்கல்பட்டு திண்டுக்கல் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இப் பணிகளுக்கு புதிய பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தாமல் பராமாரிப்புப் பணியில் உள்ள ஆய்வாளர் முதல் சர்வேயர்கள் வரை பணியமர்த்தப்பட்டுள்ளனர். நிர்வாகம் எவ்வித நிதியையும் வழங்காததால் நக்சா திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தங்களின் ஊதியத்தில் செலவழித்து அளவை இயந்திரங்களை சுமந்து செல்லும் அவலம் தொடர்கின்றது.

வீடுகள் தெருக்கள் அளவீடுகள் முதல் வருவாய்த் துறையின் கீழ் மேற்கொள்ளப்படும் பேரிடர் கால அவசர மீட்புப் பணிகள், தேர்தல் வேலைகள் என மக்கள் வாழ்வுடன் இரண்டர கலந்திட்ட நில அளவைத் துறையில், அரசாணை 297-யை கொண்டு வந்து வெளிமுகமை மூலம் 592 பணியாளர்கள் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தி கூலி பெறும் நிலையை அரசு உருவாக்கியுள்ளது. இத் தனியார்மய நடவடிக்கையால் புல உதவியாளர் இனம் முற்றும் முழுவதும் அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

தரம் இறக்கப்பட்ட குறு வட்ட அளவர்களில் 502 பணியிடங்கள் ஆறரை ஆண்டுகளாக தரம் உயர்த்தி வழங்காத அரசு அவசர அவசரமாக 500 லைசன்ஸ் சர்வேயர்களை பணியமர்த்திட ஆணை வழங்கியுள்ளது. இதன் மூலம் சர்வே ஊழியர்களின் எண்ணிக்கையில் சரிப்பாதி லைசன்ஸ் சர்வே பணியாளர்கள் உள்ள நிலையை அரசு உருவாக்கியுள்ளது. பதவி உயர்வு வாய்ப்புகள் பெரிதுமில்லாத இத்துறையில் அயல் பணிகள் வாய்ப்பு உள்ள நெடுஞ்சாலைத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, வனத்துறை, சிப்காட் போன்ற துறைகளிலும் பிற நில எடுப்பு திட்டப் பணிகளிலும் நில அளவைப் பணிகளுக்கு ஒப்பந்த பணியாளர்களை அமர்த்துவதன் மூலம் சார் ஆய்வாளர் பதவி உயர்வு முற்றிலும் பாதிக்கப்படுகின்றது. படிப்படியாக இத்துறையில் நுழையும் தனியார்மயத்தின் மூலம் வருவாய்த்துறையிலும் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ●

கட்டுரை

# ஜிஎஸ்டி மூலமாக மையப்படுத்தப்படும் அரசியல் அதிகாரமும், மூலதனமும்

**- பேராசிரியர் பிரபாத் பட்நாயக்**

சரக்கு மற்றும் சேவை வரியால் (ஜிஎஸ்டி) ஏற்பட்டிருக்கும் அதிகப்படியான சுமைகளை பொருட்கள் மீது ஏற்றுவது, அதிகாரத்தின் கடுமையான விதிகளைக் கடைப்பிடிப்பதில் இருக்கின்ற சிக்கல்கள், வரியாகச் செலுத்தப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறுவதில் உள்ள காலதாமதங்கள் ஆகியவற்றின் மீதே ஜிஎஸ்டி குறித்த விவாதங்கள் இப்போது வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த வரியால் பொருளாதாரம் மந்தநிலைக்குத் தள்ளப்படுகிறது என்பதற்குக்கூட, வெறுமனே பெரும்பாலான விற்பனையாளர்களைச் சிக்கல்களுக்குள் ஆழ்த்தியிருக்கின்ற கடுமையான நடைமுறைச்சிக்கல்களே காரணமாகக் கூறப்படுகின்றன. இந்த விவாதங்கள் எதிலும், இந்தப் புதிய வரி விதிமுறைக்குள் இருக்கும் வர்க்க உள்ளடக்கம் பற்றிப் பேசப்படுவதே இல்லை.

மாநிலங்களுக்கிடையே மாறுபட்டிருக்கும் மிகவும் சிக்கலான வரி முறைகளை, அனைத்துப் பொருட்களுக்கும், அனைத்து மாநிலங்களிலும் ஒற்றைச் சீரான மறைமுக வரிகள் என்பதாக மாற்றி அமைப்பதன் மூலம் ஏற்பட்டிருக்கும் தொடர் விளைவுகள் எவ்வாறு வர்க்கப் பிரச்சனையை இங்கே கொண்டு வரும் என்று பலரும் இது குறித்து கேட்கலாம். உண்மையில் சீரமைப்பிற்கான வழிமுறைகளாக இத்தகைய மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டும். எந்தவொரு புதிய நடைமுறையும் எதிர்கொள்கின்ற சிரமங்களே இப்போது இங்கேயும் எதிர்கொள்ளப்படுகின்றன. அப்படியிருக்கும் பட்சத்தில், இந்த மாற்றம் குறித்து ஏன் வர்க்கப் பகுப்பாய்வு தேவைப்படுகிறது?.

நமது கூட்டாட்சித் தத்துவத்தின் மீது இந்த வரிவிதிப்பு முறை தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான் என்றாலும், அனைத்து மாநில அரசுகளும் இந்த மாற்றத்தை ஒத்துக் கொண்டு விட்ட பிறகு, இது கூட்டாட்சிக்கெதிரானது என்கிற வாதம் அடிபட்டுப் போய் விடுகிறது. அப்படியே இது கூட்டாட்சிக்கெதிரானது என்ற வாதத்தை ஒத்துக் கொண்டாலும்கூட, வர்க்கம் குறித்த விவாதத்தை இங்கே நம்மால் எப்படிக் கொண்டு வர முடியும்?

கூட்டாட்சிக்கெதிரானது என்ற வாதம் மிகவும் மேலோட்டமானதாகும். இந்தப் புதிய ஜிஎஸ்டி வரி விதிப்புமுறையை முந்தைய வரிவிதிப்பு முறைக்குப் பதிலாக கொண்டு வரப்பட்டதாக மட்டுமே எடுத்துக் கொள்ள முடியாது. ஜிஎஸ்டியானது சிறுஉற்பத்தியாளர்கள், சிறு முதலாளிகள் அல்லது முறைசாராத் தொழில் என்றழைக்கப்படுகின்ற துறைகளில் உள்ளவர்களுக்கெதிராகவே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அது மூலதனக் குவிப்பு மற்றும் மூலதன மையப்படுத்தல் என்ற கருத்தை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக சிறுஉற்பத்தித் துறையானது இரண்டு வெளிப்படையான வழிகளில் பாதிக்கப்படுகிறது. முதலாவது, ஜிஎஸ்டி குறித்த சில விவாதங்களில் தொக்கி நிற்கிற, நிறைவேற்றுவதற்கான செலவோடு தொடர்புடையதாக இருக்கிறது.

நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் கட்டமைப்பின் அடிப்படையில் பார்த்தால், ஒரு பெரிய நிறுவனமானது சிறிய நிறுவனத்தின் பிரதியாகவே இருக்கிறது. நிர்வாகச் செலவுகள் என்பவை நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பொறுத்து விகிதாச்சார அளவில் மாறாது. பெரிய உற்பத்தியாளர் ஒருவருக்கு உள்ளதைப் போலவே, சிறிய உற்பத்தியாளருக்கும் நிர்வாகச் செலவு அதே அளவில் இருக்கும் என்பதால், சிறு உற்பத்தியாளர்களுக்கு இத்தகைய செலவினங்களின் சுமை அதிகமாகவே இருக்கும்.

பெரிய நிறுவனங்களைப் போன்றே சிறிய உற்பத்தியாளர் ஒருவரும் மாதத்திற்கு மூன்று தடவை தன்னுடைய கணக்கைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றிருக்கிறது. இந்த வேலையானது, சிறிய நிறுவனத்தைப் போன்று பத்து மடங்கு பெரியதாக இருக்கின்ற பெரிய நிறுவனம் மாதத்திற்கு முப்பது முறை தனது கணக்கினைச் சமர்ப்பிப்பதற்கு ஒப்பானதாக இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால்,

நிர்வாகச் செலவுகள் என்பவை நிலையான செலவினங்களின் தன்மையைக் கொண்டிருப்பதால், அதன் காரணமாகவே சிறு உற்பத்தியாளர்களுடைய விற்றுமுதலில் அவற்றின் ஓர் அலகிற்கான மதிப்பு, இந்தப் புதிய வரிமுறையின் கீழ் பெரிய உற்பத்தியாளர்களைக் காட்டிலும் மிக அதிகமாகவே இருக்கும்.

இங்கே கூடுதலாக ஓர் அம்சத்தையும் நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது. சிறிய நிறுவனங்கள் என்பவை பெரிய நிறுவனங்களின் சிறிய பிரதிகள் அல்ல. பொதுவாக பெரிய நிறுவனங்கள் சிறிய நிறுவனங்களை விட செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்டவையாக இருக்கின்றன. மூல உற்பத்திப் பொருளில் இருந்து இறுதியாக விற்பனைக்கு வருவது வரையிலும் கூட்டப்படும் மதிப்புகளின் சங்கிலியானது, பெரிய நிறுவனங்களில் இருப்பதைப் போல் அல்லாமல், சிறிய நிறுவனங்களைப் பொறுத்தவரையில், பல சிறிய நிறுவனங்களுக்கிடையே சிறிது சிறிதாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் பெரிய நிறுவனங்கள் தங்களுடைய பணிகளைச் சிறிய நிறுவனங்களுக்குக் கொடுத்து வாங்குபவர்களாக இருப்பது தெரிந்ததுதான். ஆனாலும் செங்குத்து ஒருங்கிணைப்பின் அளவு சிறுநிறுவனங்களைக் காட்டிலும் பெரிய நிறுவனங்களிடம் அதிகமாக இருக்கிறது.

சிறுநிறுவனங்கள் அதிகப்படியான செலவினங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக உற்பத்தியின் ஆரம்ப கட்டத்தில், திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று கருதி உற்பத்திக்குத் தேவையான பொருட்களின் மீதான வரியைச் சிறிய நிறுவனங்கள் செலுத்துவது வாடிக்கையானது. இவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக பெரும் எண்ணிக்கையில் சிறிய நிறுவனங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இந்த வரிமுறையின் விளைவாக பெரிய நிறுவனங்களோடு ஒப்பிடும் போது, சிறிய நிறுவனங்கள் அதிகமாகப் பாதிப்படைவதால், சிறுநிறுவனங்களைத் தொடர்ந்து நடத்துவது என்பது சிரமமான காரியமாகி விடுகிறது. சிறிய நிறுவனங்களுடைய இருப்பு என்பது இவ்வாறு ஜிஎஸ்டியின் மூலம் கேள்விக்குறியாக்கப்படுவதன் விளைவாக, மூலதனக் குவிப்பு மற்றும் மூலதன மையப்படுத்துதல் நடைபெறுகிறது.

ஆனால் இவ்வாறு பலராலும் வைக்கப்படும் இந்த வாதம் முக்கியமான வாதமாக இருக்கவில்லை. ஜிஎஸ்டியின் முக்கியமான நோக்கம் ஏற்கனவே இருக்கின்ற வரிவிதிப்பு முறைக்குப் பதிலாக வேறொரு வரி விதிப்பு முறையைக் கொண்டு வருவதல்ல. மாறாக முந்தைய வரி விதிப்பு முறையில் வரி செலுத்தாமல் இருந்த பல உற்பத்தியாளர்களை வரி செலுத்துகின்றவர்களாக மாற்றுவதுதான் ஜிஎஸ்டியின் நோக்கம்.

இவ்வாறு வரி செலுத்தாதவர்களாக இருந்த சிறு உற்பத்தியாளர்கள், முறைசாராத் துறையில் உள்ளவர்கள் எல்லாம் இப்போது தங்களைப் பதிவு செய்து கொண்டு ஜிஎஸ்டியைச் செலுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வரிவிதிப்பு முறை என்பது எல்லாவற்றிற்கும் மேலாக, முறைசாராத் துறையின் மீதான வரி, அதாவது சிறு உற்பத்தியாளர்கள், சிறு முதலாளிகள் செலுத்துகின்ற வரியை அதிகப்படுத்துவதாகவே இருக்கும்.

பல்வேறு பொருட்களின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதங்களின் மீது கவனத்தைச் செலுத்துகிற வேளையில், முறைசாராத் துறை மீது ஜிஎஸ்டி வரி விதிப்பின் மூலமாகப் போடப்பட்டிருக்கும் அதிகமான வரி குறித்த கடுமையான விமர்சனங்கள் காணாமல் போய் விடுகின்றன. பொருட்களின் மீது போடப்பட்டிருக்கும் வரிகளின் மீது மட்டும் நமது கவனம் என்பது இல்லாமல், பல்வேறு சமூகக் கட்டமைப்புகளின் மீது திணிக்கப்பட்டிருக்கும் வரிகளின் மீது நமது கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த புதிய வரி விதிப்புமுறையின் மூலமாக, முறைசாராத் தொழிலில் உள்ள சிறுஉற்பத்தியாளர்கள், சிறுமுதலாளிகளின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகள் உயர்ந்திருக்கின்றன. அண்மையில் ஸ்க்ரோல்.இன் இணையப் பத்திரிகையில் வெளியாகி உள்ள கட்டுரையில், இதற்கு முன்னராக வரி வலைக்குள்ளே சிக்கியிராத, பனாரஸ் பட்டுச் சேலைகளை நெய்கின்ற கைவினைஞர்கள் எவ்வாறு இந்த ஜிஎஸ்டியின் மூலமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

சிறுஉற்பத்தித் துறையின் மீது போடப்பட்டிருக்கும் அதிகமான வரி, இந்தத் துறையிலிருந்து உற்பத்தியாகின்ற பொருட்களின் விலைகளை உயர்த்துவதால், இந்தத் துறையில் மந்தநிலை ஏற்படுகிறது. இந்த விலையேற்றத்தைச் சமாளிப்பதற்கு அதிகமாகத் தேவைப்படுகின்ற பணம் எவ்விதப் பாதிப்புமின்றி கிடைக்கும் போது, இவ்வாறான மந்த நிலை ஏற்படாது. ஏனெனில் பொருட்களை வாங்குபவர்கள் தங்களுடைய சேமிப்பில் உள்ள பணத்தை எடுத்துப் பயன்படுத்துவார்கள். ஆனால் முறைசாராத் தொழிலில்

இருந்து உற்பத்தியாகும் பொருட்களை வாங்குபவர்களாக, தங்களுக்கென்று சேமிப்பு எதனையும் வைத்திராத, விலை உயர்வால் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்க முடியாத தொழிலாளர்களே இருக்கிறார்கள். எனவேதான் விலை உயரும் போது, தேவைகள் குறைந்து மந்த நிலை ஏற்படுகிறது.

ஜிஎஸ்டி வரிவிதிப்பின் காரணமாக முறைசாராத் துறைகளில் மந்தநிலை ஏற்படுவது சரி. ஆனால் அத்தகைய மாற்றத்தின் விளைவாக ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் பொதுவாக ஏன் மந்தநிலை ஏற்படுகிறது? தேவை குறையும் போது, முறைசாராத் துறையின் உற்பத்தி குறைகிறது. முறைசார்ந்த தொழில்களில் ஜிஎஸ்டியின் விளைவாக விலை வீழ்ச்சி ஏற்பட்டாலும், அதனால் ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பு என்பது முறைசாராத் தொழில்களில் ஏற்பட்ட இழப்பைப் போதுமான அளவிற்கு சரிக்கட்டுவதில்லை. இதுவே பொதுவான மந்தநிலை ஏன் ஏற்படுகிறது என்ற கேள்விக்கான எளிமையான பதிலாக இருக்கும்.

முறைசார்ந்த பொருளாதாரத்தில் உள்ள பொருட்களை வாங்குபவர்களில் கணிசமானவர்கள் விலையேற்றத்தால் பாதிக்கப்படாத பொருட்களை வாங்குவதற்கான தேவையுடன் இருப்பதால், பொருட்களின் விலையானது குறைக்கப்பட்டு, (அவ்வாறு குறைக்காவிடில், முறைசாராத் துறைகளில் ஏற்பட்ட மந்த நிலையைச் சமாளிக்க முடியாது) அவர்களுடைய கைகளில் இருக்கும் பணம் அதிகரித்து அவர்களுடைய சேமிப்பு உயர்கிறது. எனவேதான் முறைசாராத் தொழிலில் ஏற்படும் மந்தநிலையானது மொத்த பொருளாதாரத்திலும் நாம் காண்கிற மந்த நிலையை ஏற்படுத்துவதாக (ஜிஎஸ்டி மட்டுமே இதற்கான ஒற்றைக் காரணம் இல்லை என்றாலும்) இருக்கிறது.

ஜிஎஸ்டியால் ஏற்பட்டிருக்கும் இந்த மந்தநிலை என்பது தற்காலிகமானதல்ல. இந்த புதிய வரிவிதிப்பு முறையால் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் தீர்ந்த பிறகு இந்த மந்தநிலை மறைந்து விடப் போவதில்லை. இந்த மந்தநிலையானது இந்த வரிவிதிப்பு முறையின் ஓர் அங்கமாக, முறைசாராத் துறைகளின் மீது போடப்பட்டிருக்கும் அதிகப்படியான வரிகளின் மூலமாக உருவானது. இந்த மந்தநிலையின் மூலமாகவே மூலதனக் குவிப்பு மற்றும் மூலதன மையப்படுத்தல் ஆகியவை ஏற்படப் போகின்றன.

சிறுமுதலாளிகளைத் தள்ளி வைத்து விட்டு, மூலதனத்தை மையப்படுத்துவதற்கு ஜிஎஸ்டி பயன்படும், சிறுஉற்பத்தியாளர்களை ஒதுக்கி விட்டு மூலதனக் குவிப்பு திணிக்கப்படும் என்பவை உண்மையானால், ஏகபோகத்திற்கு ஆதரவாகப் பேசுகிறவர்களும் ஏன் அதை விமர்சனம் செய்கிறார்கள் என்ற கேள்வி எழலாம்.

முறைசாராத் துறைகளின் மீது மட்டுமல்லாது, ஒட்டு மொத்த பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற இந்த மந்தநிலையானது, முறைசார்ந்த துறைகள் மீதும் தனது தாக்கத்தினை மறைமுகமாக ஏற்படுத்துகின்றது. எனவே பெருமூலதனக்காரர்கள் இத்தகைய பொருளாதார மந்த நிலையை விரும்ப மாட்டார்கள். ஆகவே இதற்கு முன்பாக ஜிஎஸ்டி மிக அவசியமானது, அதனை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அவர்கள் இப்போது ஜிஎஸ்டியை விமர்சிக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொல்வதானால், ஜிஎஸ்டி என்பது முந்தைய பணமதிப்பு நீக்கத்தைப் போலவே சிறுஉற்பத்தியாளர்கள், சிறுமுதலாளிகள் ஆகியோரை நீக்கி விட்டு மூலதனத்தை மையப்படுத்துகின்ற வழிமுறையாகவே இருக்கின்றது.

மாநில அரசிடம் உள்ள அரசியலமைப்பு அதிகாரங்களை நீக்குவதற்கும், நமது கூட்டாட்சி அமைப்பைத் தகர்ப்பதோடு மத்தியில் ஆளுகின்ற கட்சியால் ஆட்சி செய்யப்படுகின்ற மாநில அரசாங்கங்களுடன் சேர்ந்து, மிக முக்கியமான ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டங்களில் எல்லாம் இறுதியான முடிவுகளை எடுப்பதன் மூலம் மத்திய அரசுக்கு அடிபணிந்து நடக்கும் வகையில் மாநில அரசுகளை மாற்றுவதற்கும் ஜிஎஸ்டி உதவுகிறது. இதற்கிணையாக மூலதனத்தை மையப்படுத்தும் வேலையும் நடைபெறுகிறது.

அரசியல் அதிகாரத்தை மையப்படுத்துவது, மூலதனத்தை மையப்படுத்துவது ஆகியவை இந்த வரி விதிப்பு முறை மாற்றத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இருவேறு செயல்முறைகள் ஆகும். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று உதவி, தங்களைப் பலப்படுத்திக் கொள்பவையாக இருக்கின்றன.

இந்த வரி விதிப்பு மாற்றத்திற்கு எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும், அடிப்படையில் இனவாத – சர்வாதிகாரத் தன்மை கொண்ட, ஜனநாயக உரிமைகள், மதச்சார்பின்மை, கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை வெறுத்து ஒதுக்குகின்ற பாஜக தலைமையிலான அரசாங்கம் அதனை அறிமுகப்படுத்தியுள்ளது என்பது எந்த வகையிலும் ஆச்சரியப்படுத்துவதாக இல்லை. ●

கட்டுரை

# எண்பதுகளின் தமிழகப் பண்பாட்டு வாழ்வின் படிமங்கள்

**- ம.சுவாமிநாதன்**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற நூல் வெளியீடு நிகழ்வில் வெளியிடப்பட்ட நூல் "ஊரென்று எதனைச் சொல்வீர்?" எனும் நூல். இந்நூலை திருவண்ணாமலை கவிஞர் ம.சுவாமிநாதன் எழுதியுள்ளார்.

கட்டுரைத் தொகுப்பான இந்நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு கதை புதைந்திருக்கிறது. ஒவ்வொரு கட்டுரையிலும் பொருத்தமான அறிமுகக் கவிதை அணி செய்கிறது. ஒவ்வொரு கட்டுரையும் கவித்துவமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு ஏடும் தரமான வழவழப்பான தாளில் அழகான படங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் விலை கூடியுள்ளது.

பார்த்துப் பார்த்து நேர்த்தியாக நூலைக் கொண்டு வந்துள்ள விளிம்பு பதிப்பகம் பாராட்டுக்குரியது. இப்படி செய்நேர்த்தியால் மட்டுமல்லாது உள்ளடக்க நேர்த்தியாலும் இந்நூல் சிறப்பு பெறுகிறது.

வேளாண்மைப் பொறியாளராக உயர் பதவி வகித்து அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நூலாசிரியர் தமது பால்ய கால நினைவுகளையும் அரசுப்பணியின் போது நிகழ்ந்த சங்கப் பணிகளையும் நினைவுகூர்ந்து பொருத்தமான கட்டுரைகளாக வடிவமைத்திருப்பது நன்று.

வாழ்நாளின் அறுபதுகளில் பால்ய கால நினைவுகளை அசை போடுகின்ற ஒவ்வொருவருக்கும் அவை திரும்ப வரப் பெறாத நினைவலைகளாக மோதும்போது நவரத்தின குணங்களும் வெளிப்படும். இன்ப துன்பம் கலந்த வாழ்க்கையில் வாழ்க்கையை வழிமறித்தவற்றுடன் இடையறாத போராட்டத்தை நடத்தி வென்று வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் நிற்கும் வேளையில் மலரும் நினைவுகள் ஏற்படுத்தும் அதிர்வலைகள் கடலலையாய் ஓயாமல் அணிவகுக்கும். நூலாசிரியருக்கும் அப்படித்தான்.

தென்மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து கல்வி பயின்று அரசுப் பணி நிமித்தமாக திருவண்ணாமலை எனும் இலக்கிய மண்ணிற்கு வந்து சேர்ந்த சுவாமிநாதனின் தொடர்பு சந்துரு போன்ற இலக்கிய ஞானம் கொண்ட தொழிற்சங்கத் தலைவர்களுடனும் பவா செல்லத்துரை போன்ற இலக்கியவாதிகளுடனும் சரியான வழிகாட்டுதலுக்கு வழிவகுத்தது.

'தோழமை' எனும் கட்டுரையில் தொழிற்சங்கத் தலைவர்கள் வெறுமனே பொருளாதார கோரிக்கைகளுக்காக என்றில்லாமல் அறிவை விரிவு செய்யவும் அகண்டமாக்கவும் எப்படி வழி காண்பிப்பார்கள், கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் எப்படி தெளிவான பாதையில் கைப்பிடித்து பயணிக்க வைப்பார்கள் என்பதைத் தன் அனுபவ வாயிலாக சரியாகவே பதிவு செய்துள்ளார் சுவாமிநாதன்.

அதன் பின்னணியில்தான் இளமையிலேயே தீவிர வாசிப்பாளரும் கலையார்வம் கொண்டவருமான சுவாமிநாதன் செழுமைப்பட்டு தனது நூல் மூலமாக அனுபவப் பகிர்வுகளை நேர்த்தியாகத் திறம்பட எழுதியுள்ளார் என்று பார்க்க முடிகிறது.

அப்பாவின் மீதான நேசமும் மதிப்பும் சில கட்டுரைகளில் சுவாமிநாதனின் அனுபவக் காட்சிகளால் உணர முடிகிறது. "அப்பா எனும் விவசாயி" எனும் கட்டுரையில் விவசாயத்தை சுவாசிப்பாய் நேசித்த நூலாசிரியரின் அப்பா பட்ட துன்ப துயரங்களை அவரது கட்டுரையைப் படித்துத் தான் நெக்குருக வேண்டும்.

தனது இளமைக் காலத்தில் காதல் வயப்படாத இளைஞர்கள் உண்டென்றால் அது அரிதுதான். அப்படிப்பட்ட அரிதானவரல்ல சுவாமிநாதன். அவரும் காதல்வயப்பட்டிருக்கிறார். பள்ளிப் பருவம், கல்லூரிப் பருவம் என காளையர்க்கான காதல்வயப்பட்டு கவிதைகள் புனைவதும் நண்பர்களுக்காக காதல் கவிதைகள் புனைந்து கொடுப்பது மாக இளமைக்காலம் ரம்மியமாக இருந்ததை இவரது கட்டுரைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

திரைத்துறையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் தீவிர ரசிகனாகவும் அதே நேரத்தில் கலை, அரசியல் துறைகளில் கலைஞர் கருணாநிதி தாசனாகவும் இருந்துள்ளார் சுவாமிநாதன். அதற்காக அவர் செலவிட்ட நேரங்களையும் நினைவு படுத்திக் காட்சிப்படுத்தியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது.

சினிமா பார்ப்பது என்பது எண்பதுகளின் இளைஞர்களுக்கு நல்ல அனுபவம்தான். கிராமத்து டெண்ட் கொட்டகைகளில் மணல் சேர்த்து அதில் உயரமாக அமர்ந்து படம் பார்ப்பதும் பின்னாலிருந்த வர்களுக்கு மறைப்பதாக ஆரம்பிக்கும் வாய்த் தகராறு சண்டையாக வளர்ந்து டெண்ட் கொட்டாய் அல்லோகலப்படுவதும் மறக்க முடியாதவை. அதேபோல்தான் சுவாமிநாதனுக்கும் ஏராளமான அனுபவங்கள் வாய்த்திருக்கின்றன. அத்தகைய சினிமா கொட்டகை தனது கிராமத்தில் மூடப்பட உள்ளதை அறிந்து சுவாமிநாதன் பட்ட வேதனையும் அந்த திரையரங்கத்தை மூடவொட்டாமல் பார்த்துக் கொள்ள மெனக்கெட்டு பணியாற்றியதையும் கட்டுரையில் காணமுடிகிறது.

தனது கிராமத்தை அங்குலம் அங்குலமாக வர்ணிக்கும் நூலாசிரியர் அத்தகைய கிராமத்தையும் அரண்மனை போன்ற தங்களது பழைய வீட்டை வர்ணிப்பதோடு அத்தகைய கிராமத்தையும் பெரிய வீட்டையும் பிரியும் சோகம் அவரது எழுத்தில் வாசிக்கும்போது நம்மையும் கண் கலங்கச் செய்கிறது.

"உறுதியான காம்புக்கும்
மெலிதான மலருக்கும்
இடையே இருக்கும்
சிறு இடைவெளியில் தான்
வாழ்க்கை பெரும்பாலும்
ஊர்ந்து
போய்க் கொண்டிருக்கிறது"

எனும் கவிதையைக் குறிப்பிட்டுக் கவலையுடனும் அதே நேரத்தில் நம்பிக்கையுடன் வாழ்க்கையைக் கடந்து செல்வதைக் குறிப்பிடும் சுவாமிநாதன் இந்தக் கவிதை அவரது மகள் அருணாவுடையது என்பதைக் குறிப்பிட்டு நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார்.

"புன்கணீர் பூசல்" எனும் கட்டுரை ஒரு திரைப்படமாய் விரிகிறது. அதைப் படிக்கும் போதுதான் அது நம் மனதைப் பாதிக்கும் நிலையையும் உணர முடியும்.

"பூமியில் பூக்கும் திருவிழா" எனும் கட்டுரையில், கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட பிறகு நகர்ந்து விட்டதாக ஒரு நம்பிக்கை அவ்வட்டாரத்தில் உண்டு என்பதையும் துடைக்கூத்து நடைபெறும் திருவிழாவுக்காக மண்ணுக்கடியில் புதைந்திருக்கும் ஊர் மீண்டெழுந்து பூமிக்கு வருவதும் திருவிழா முடிந்ததும் பின் மீண்டும் அந்தப் பழைய ஊர் பூமிக்கடியில் தன்னைப் புதைத்துக் கொள்வதும் பற்றிக் குறிப்பிட்டுள்ளது வியப்பைத் தருகிறது.

இப்படி நூல் நெடுக விரவியுள்ள அனுபவத் தெறிப்புகளை வாசிக்கும்போது வாசகர்களின் பால்ய கால நினைவுகளும் சேர்ந்தே வரும் என்பதில் ஐயமில்லை.

"70-80களின் தமிழகப் பண்பாட்டு வாழ்வின் ஒரு குறுக்குவெட்டாக உணர்ச்சிகரமான பதிவாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன" என முன்மொழிந்துள்ள இந்நூலின் அணிந்துரையாளர் மூத்த எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளதை 'உணர்ச்சி சாமிநாதனின்' நூலுக்கு வழிமொழிகிறேன்.

வாங்குங்கள். வாசியுங்கள். நீங்களும் அனுபவக் கடலில் நீந்துவீர்கள். ●

# உயர்கல்வியின் கதவுகளை அடைக்கும் தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தம்: சமூக நீதியைக் காவு கொடுக்கும் அபாயம்!

**- கவிப்பிரியன்**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்த மசோதா, மாநிலத்தின் உயர்கல்விக் கட்டமைப்பில் ஒரு கரும்புள்ளியாகும். இந்தச் சட்டத் திருத்தம், அரசு உதவி பெறும் கல்லூரிகளை *(Aided Colleges)* பல்கலைக்கழகங்களாக மாற்ற வழி வகுக்கிறது. சமூக நீதியின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இது மாநிலத்தின் பல்லாண்டு கால சமூக நீதிப் போராட்டத்தின் அடித்தளத்தையே அசைக்கும் ஒரு பிற்போக்கு நடவடிக்கையாகும். இது, கல்வியை ஒரு மக்களுக்கான சேவையிலிருந்து இலாப வெறி கொண்ட வணிகப் பொருளாக மாற்றும் முயற்சியே ஆகும்.

**சமூக நீதிக்கு எதிரான ஆயுதம்..**

இச்சட்டத் திருத்தத்தின் மிகக் கடுமையான பாதகம், இடஒதுக்கீட்டுக் கொள்கையை நீர்த்துப் போகச் செய்வதாகும். இன்றுவரை, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் தமிழ்நாட்டின் 69% இடஒதுக்கீடு கட்டாயமாகப் பின்பற்றப்படுகிறது. இது கிராமப்புற ஏழை மாணவர்கள், பட்டியல் சாதிகள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் உயர் கல்வி வாய்ப்பை உறுதி செய்தது. ஆனால், ஒரு அரசு உதவி பெறும் கல்லூரி தனியார் பல்கலைக்கழகமாக மாறும்போது, இந்த இடஒதுக்கீட்டுச் சலுகைகள் மருத்துவம் மற்றும் அது சார்ந்த படிப்புகளைத் தவிர பிற கலை, அறிவியல், மற்றும் பொறியியல் படிப்புகளுக்கு இருக்காது என்ற நிலை உருவாகும்.

இது, கல்விச் சந்தையை இலாப வெறியர்களுக்குத் திறந்துவிட்டு, ஏழை மற்றும் உழைக்கும் வர்க்க மாணவர்களை வெளியேற்றும் ஒரு சதி. அரசு உதவி பெறும் கல்லூரிகளை தனியாருக்குக் கொடுப்பது என்பது பொதுச் சொத்தை அபகரித்து, அதை ஒரு சிலரின் கையில் கொடுப்பது போலாகும். இடஒதுக்கீட்டைத் தவிர்ப்பதன் மூலம், மாணவர் சேர்க்கை தகுதி அடிப்படையிலிருந்து *(Merit)* பணம் கொடுக்கும் திறன் அடிப்படையாக *(Money)* மாறும்.

**அரசின் பொறுப்பு விலகல் (Retreat of the State)**

அரசின் பிரதானக் கடமை, குடிமக்களுக்கு நியாயமான, சமமான, தரமான கல்வி வாய்ப்புகளை வழங்குவதாகும். அரசு உதவி பெறும் கல்லூரிகளை தனியார் பல்கலைக்கழகங்களாக மாற்ற அனுமதிப்பது, இந்த அடிப்படைப் பொறுப்பிலிருந்து விலகுவதையே குறிக்கிறது. அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு *(Aided Colleges)* வழங்கப்படும் அரசு மானியம் *(Grant-in-aid)* நிறுத்தப்படலாம். அரசு, கல்வி நிறுவனங்களை நடத்துவதற்கான நிதிப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது. இது, பொதுச் சொத்தை தனியார் நிர்வாகங்களின் கைகளில் ஒப்படைப்பதாகும். தனியார் பல்கலைக்கழகங்களின் நிர்வாகம், கட்டண நிர்ணயம், ஆசிரியர் நியமனங்கள் போன்றவற்றில் அரசின் நேரடித் தலையீடு மற்றும் கண்காணிப்பு குறையும். உயர்கல்வித் துறையை சந்தை சக்திகளின் கைகளில் ஒப்படைத்துவிட்டு, அரசு தன் கட்டுப்பாட்டை இழந்ததாகக் கருதப்படும்.

**கட்டணக் கொள்ளையும் ஏழைகளுக்கு மறுக்கப்படும் வாய்ப்பும்..**

அரசு உதவி பெறும் கல்லூரிகள் குறைந்த கட்டணத்தில் தரமான கல்வியை வழங்கி வந்தன. அது, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். சென்னை லயோலா அல்லது மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்ற புகழ்பெற்ற அரசு உதவி பெறும் கல்லூரிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கி வருகின்றன. இவை தனியார் பல்கலைக்கழகங்களாக மாறினால், அரசு மானியம் (Grant-in-aid) நிறுத்தப்படும். இதனால், இன்று ₹5,000 கட்டணம் வசூலிக்கும் படிப்பு, திடீரென ₹50,000 அல்லது அதற்கும் அதிகமாக உயரும். இதனால், ஏழை மாணவர்கள் கடன் வாங்கியோ அல்லது கல்வியைத் தொடர முடியாமலோ வெளியேற நேரிடும். உயர்கல்வி இனி "உரிமை" என்ற நிலையில் இருந்து "விலை உயர்ந்த சரக்கு" என்ற நிலைக்குத் தள்ளப்படும். இது, அரசால் வழங்கப்படும் இலவசக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது.

**உழைக்கும் வர்க்கத்தின் உரிமைப் பறிப்பு..**

ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பைப் பறிப்பது இச்சட்டத்தின் மற்றொரு பெரும் பாதகமாகும். இன்று, அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்கள் அரசு ஊதிய விதிகள் (UGC/அரசு விதிமுறைகள்), ஓய்வூதியம், அரசுப் பணிப் பாதுகாப்பு போன்ற சலுகைகளைப் பெறுகின்றனர். இது, தனியார் சுயநிதிக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. கல்லூரி தனியார் பல்கலைக்கழகமாக மாறும்போது, இந்த ஆசிரியர்களும் ஊழியர்களும் தனியார் நிர்வாகத்தின் விருப்பத்துக்கு ஏற்ப செயல்படும் நிலைமைக்குத் தள்ளப்படுவார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம் இருக்காது, நிர்வாகத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடும். இது, தொழிலாளர் நலன்களுக்கு எதிரான ஒரு செயலாகும்.

**தரமற்ற பல்கலைக்கழகங்களின் பெருக்கம் (Mushrooming)..**

சட்டத் திருத்தம், தனியார் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான நிலத் தேவையை 100 ஏக்கரில் இருந்து 25 ஏக்கராக மாநகராட்சிப் பகுதிகளில்) குறைத்துள்ளது. நிலத் தேவையைத் தளர்த்துவது, போதுமான உள்கட்டமைப்பு இல்லாத தனியார் நிறுவனங்கள், சுலபமாகப் பல்கலைக்கழக உரிமையைப் பெற வழி வகுக்கும். நிலமே இல்லாத அடுக்குமாடிக் கட்டிடங்களிலும் கூட பல்கலைக்கழகங்கள் தோன்ற வாய்ப்பு உண்டு. இதனால், "புற்றீசல் போல" தரமற்ற பல்கலைக்கழகங்கள் பெருகும் அபாயம் உள்ளது.

உயர்கல்வியில் சமூக நீதியைக் காக்க விரும்பும் ஒரு முற்போக்கு அரசு பெறும் அரசு, இத்தகைய சட்டத் திருத்தத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். உதவி கல்லூரிகளை தனியார்மயமாக்குவதற்குப் பதிலாக, அவற்றுக்குத் தேவையான நிதியுதவி மற்றும் தன்னாட்சி அதிகாரத்தை வழங்கி, உயர்கல்வி தொடர்ந்து அனைவருக்கும் சமமாகக் கிடைக்கும் வாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதே சமூக நீதியில் நம்பிக்கை கொண்டோரின் ஒற்றைக் கோரிக்கையாகும்!●

Printed and Published by M.Srinivasan on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com